# திராவிடநாடு

5—4—59 | வார வெளியீடு | விலை 16 காசு




சேர்ந்து வந்தார்கள், சிறப்பாக ஊர்வலம் சென்றார்கள், சென்ற இடமெல்லாம் இரட்டைப் பிள்ளைகளோ என்றெண்ணும்படியாக நடந்துகொண்டார்கள், ருஷியத் தலைவர்களான குருஷேவும் புல்கானினும்! இந்தியத் துணைக்கண்டத்துக்கு 'விஜயம்' செய்த அவர்களிலே ஒருவர் அரசியல் பதவிகளிலிருந்து 'ஷேவ்' செய்யப்பட்டுவிட்டார். புவியாளும் பெரும்பொறுப்பில் இன்றில்லை, புல்கானின்!!

மதமெனும் திமிர்பிடித்தலையாமல், மக்களுக்குப் புதிய வழிகாட்டும் அத்தலைவர்களுக்கு, எந்தளவுக்கு, உபசாரமும் வரவேற்பும் அளித்தாரோ, அந்தளவுக்கு எள்ளளவும் குறையாமல், மதத் தலைவர்களாம் டலாய்லாமா, பஞ்சன்லாமா என்போரையும் அழைத்து வந்து கொண்டாடினர், நேரு பண்டிதர்! அவர்களிலே ஒருவரான டலாய்லாமா (படத்திலிருப்பவர்) இருக்குமிடம் சரியாகத் தெரியவில்லை, என்கிறது சேதி. திபேத் நாட்டின் ஆட்சிப்பொறுப்பு அவருக்கு அடுத்த நிலையிலிருக்கும் பஞ்சன்லாமா, வசம் தரப்பட்டிருக்கிறதாகச், சீனச்சேதி, செப்புகிறது!!

பண்டிதநேருவின் 'வரவேற்பை' யார் பெற்றாலும் அவர்களுக்கு விரைவில் ஏதாவது ஒரு ஆபத்து வரும் என்று சொல்ல, நாம் சகுன சாத்திரத்தில் நம்பிக்கையுடையவர்களல்ல. ஆனால், அவர்போடும் கணக்குகள் அடிக்கடி பிசகி விடுகின்றன என்பதையே உணர்த்த விரும்புகிறோம். கூடிவாழ்தல்— எனும் அவரது கொள்கைப்படி, இப்படிச் சகலரையும் அழைத்து, பூச்சூட்டி, நேசத்தையும் பாசத்தையும் நிலைநாட்டிக்கொள்ளும் முயற்சிகளை அடிக்கடி செய்கிறார். அவர்களையெல்லாம் இங்கே அழைத்து வந்து, "இப்படிப்பட்டவர்கள் இந்தியாவுக்குச் சிநேகம். எனக்கும் சிநேகம்", என்று காட்டுகிறார். மக்களுக்கும் அச்சமயத்தில், வியப்பும், பெருமையும் ஏற்படுகிறது. ஆனால், இவரால்

போற்றப்பட்டவர்கள், புழுதிமேடு நோக்கிப் போக நேர்ந்தது எனும் சேதிகள் வரும்போது, இவர்களையா நம்பினோம் என்ற ஏக்கமும் உண்டாகத்தான் செய்கிறது.

குருஷேவும் புல்கானினும் கொண்டுவரப்பட்டபோது, அவர்களுடைய ஒற்றுமையும், அவர்கள் வாழும் நாட்டின் முன்னேற்றமும், எல்லோரது இதயத்திலும் ஒலித்தது! அப்படிபபட்டவர்களது நேசமும்பாசமும் நேருவுக்கு இருக்கும்போது, நமக்கென்ன, என்று நம்பியோரும் உண்டு!! ஆனால், அங்கும், அடிபிடி உண்டு, ஆளை 'ஷேவ்' செய்வதுண்டு, அதிகாரம் எனும்போது 'காமராஜரிசம்' நடப்பதுண்டு, என்று கண்டபோது, பூ! இவ்வளவுதானா எனும்நினைப்பு எழவே செய்தது. அதேபோல, திபேத் வாழும் மக்களுக்குக் கண் கண்ட தெய்வம்போல விளங்கும் லாமாக்களை அழைத்து வந்து, காட்டியபோது, மதமார்க்கத்தி லீடுபட்டோரும் ஆத்திக வழியே சிறந்த வழியெனக் கருதுவோரும் ஆனந்தப்பட்டனர். ஆனால், இதோ, சேதி வருகிறது, டலாய் லாமா, தன் 'கோயிலை' விட்டு எங்கோ கடத்திச் செல்லப்பட்டார் என்று!!

புல்கானினுக்கு ஆபத்தும் 'அர்ச்சனை'யும் நடந்தபோதும் நேருவால் ஒன்றும்செய்யமுடியவில்லை! டலாய் லாமா சங்கடத்தில் சிக்கிக்கொண்ட சேதி வருகிறபோதும், நேரு அவர்கள் திகைப்பையும் பெருமூச்சையுமே தர நேருகிறது!!

அதோ பாரடி! அவ்வளவு பெரிய 'பிளைமத்' காரில் போகிறவன் யார் தெரியுமா? என் சிநேகிதன்!! என்று இல்லக் கிழத்தியிடம் சொல்லிக்கொள்வதால், என்ன பயன்? நம்முடைய நண்பன் சீமானா, அல்லவா என்பதிலா அவளுக்கு அக்கரை! இரண்டு படிக்கு, நாலுபடி அரிசி கொண்டுவந்தால் அவளுக்கு ஆனந்தம்!! — அது போலத், தான வாழும் நாட்டின் மக்களுக்கு, தன [illegible] செல்வாக்கையும், உலக மன்றத்தில் தான் பெற்றுள்ள அரசியல் தலைவர்களின் சிறப்பையும், நம்மிடம் காட்ட முயன்றார் நேரு—இன்னும் முயல்கிறார். 'பிளைமத்' காரில் சென்றவன், மதுவிலக்குக் குற்றத்துக்காகப் போலீசாரால் இழுத்துச் செல்லப்படும்போது (சீமான்களை எப்படி மதுவிலக்குச் சட்டம் தொடுகிறது என்கிறீர்களா? உதாரணத்துக்கெனக் கருதுங்களேன்) மனைவி பார்த்து, அதோ பாரும் உமது நண்பன் கதியை என்றால், எப்படியிருக்கும் பெருமை பேசிய கணவனுக்கு! கணவனென்ன, கவர்னரா, அல்லது மந்திரியா, அவனை விடுவிக்க!!

நேரு அவர்களுக்கு, டலாய் லாமா விவகாரம், பெரிய தலைவலியாயிருக்கிறதே ஒழிய, எதுவும், செய்யும் கட்டத்திலில்லை, அவர். ஏனெனில், எந்த டலாய்லாமாவை அழைத்து வந்து விருந்தும் வேடிக்கையும் நடத்தினாரோ, அதே டலாய்லாமாவின் திபேத் மீது 'படை'யெடுத்ததாகச் சொல்லபபடும் செஞ்சீனாவின் சூ-என்-லா-யையும் அதே அளவுக்கு அழைத்து வந்து கொஞ்சியவர், நேரு.

திபேத்துக்கு அதிபதி டலாய் லாமா! செஞ்சீனத்துக்குப்பிரதமர் சூ-என்-லாய்! நேருவுக்குத் திபேத்தும் நேசநாடு! சீனமும் நேசநாடு! —இன்று, அந்த இரண்டுக்குமிடையே சண்டை. என்னசெய்ய முடியும் நேரு? இளைத்த நாடு, திபேத்! மலை சீனம்!! என்ன செய்யவேண்டும் நேரு?

இதே கேள்வியை, இந்தக் கிழமை, எழுப்பியிருக்கிறார்கள், பார்லிமெண்டில், பலர். "திபேத், நமக்கு அருகாமையிலிருக்கும் மண்ணன்றோ! அங்குள்ள டலாய் லாமா நமக்கு நண்பரன்றோ! அவருடைய தலைநகராம் லாசாவை, சீனப்படைகள் பிடித்துவிட்டனவாமே! சீனப்படைகளை எதிர்த்த திபேத்திய கிளர்ச்சிக்காரர்களுடன் டலாய்லாமா ஓடிவிட்டதாகத் தகவல் வருகிறதே! திபேத், நம்மை நோக்கி, அபயக்குரல் எழுப்புகிறதே! அடிகுத்துக்குப் பயந்து அண்டையிலுள்ள இந்திய எல்லைக்குள் திபேத்தியர் வந்தால் அபயம் அளிப்பீரா?" என்றெல்லாம் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள்.

திபேத், சிறுநாடு! டலாய்லாமா எனும் மதத்தலைவர்தான் அதன் அரசுக்கும் தலைவர்! இப்போதிருக்கும் டலாய்லாமாவுக்கு வயது 23-தான். அரசன் மகன் அரசன்!—என்பதுபோல அல்ல, டலாய்லாமாக்கள் பதவிக்கு வருவது. மக்கள் ஓட்டுப்போட்டுத் தேர்ந்தெடுப்பதும் அல்ல. டலாய் லாமா என்பது ஒருவருடைய பெயரல்ல, இருக்கையின் பெயர்.

ஒரு டலாய்லாமா இறந்துவிட்டால், அந்த இடத்துக்கு வர வேண்டிய ஆள், இன்ன இடத்திலிருக்கிறான் என்று கூறிவிட்டுச் சாவாராம். அவர் சொன்ன அடையாளம் உள்ளவனைத் தேடிப்பிடித்து, பதவியில் அமர்த்துவார்களாம்.

பல சமயங்களில் இப்படி நடப்பதில்லை! அப்போதெல்லாம், திபேத், திண்டாடும். குழப்பமும் ஆவலும் சூழும். இரண்டு மூன்று ஆண்டுகள் இந்நிலை நீடிக்கும். பிறகு, அரசாங்க சோதிடர்களைக் கேட்பார்கள். அவருக்கு 'சாமி' வரும். எந்த இடத்தில், எந்தெந்தக் குறிகளுடன், அடுத்துவரவேண்டிய 'டலாய்லாமா' இருக்கிறார் என்று சொல்லப்படும். உடனே, டலாய்லாமா பதவிக்கு அடுத்த நிலையிலுள்ள பஞ்சன்லாமாவும் பரிவாரங்களும், அந்த இடத்துக்குத் தேடக் கிளம்புப! 'குறி' சொன்னதுபோல, அடையாளமுள்ள பையன் கிடைத்தால் அழைத்துவந்து, பதவியிலமர்த்துவார்கள்! அவர், புற உலகிலிருந்து பிரிக்கப்பட்டு, தனித்து வாழும்படி செய்யப்படுவார். அண்ணன் தம்பிகள் இருந்தால், அவருடன், விளையாட அனுமதிக்கப்படுவர். பெண்களை நெருங்கவும் விடார்! தனிமையான எளிமையான வாழ்க்கை முறை போதிக்கப்படும்.

உலகின் கூரை'—என்று கூறப்படும் திபேத்தில், வாழும் இந்த டலாய்லாமா பூலோகக் கடவுள், அங்குள்ளவர்களுக்கு. அபாரமான சக்தியும், ஆண்டவனின் திறமையும் நிரம்பியவர் என்று திபேத்தியர் அவரை வழிபடுவார்கள். (அப்படிப்பட்ட கடவுளுக்கா இப்படியொரு ஆபத்து? எனக் கேட்க [illegible] தோன்றும். சீரங்கத்தில்தான், 'தெய்வமே' திக்கு இல்லையாகிறதே!!) இந்த டலாய் லாமா, சில பிரபுக்கள், மதகுருக்கள் உதவியுடன், அங்கு வாழும் 50-இலட்சம் ஆதிவாசிகளையும் ஆள்கிறார். அப்படிப்பட்டவருக்குத்தான், இப்படியொரு ஆபத்து! இன்று!!

(16-ம் பக்கம் பார்க்க)

# கறிகாய்க்கும் வரியா!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [5 4—59] தனிப் பிரதி 16-காசு [இதழ் 38

ஊரான் ஊருணித் தோட்டத்திலே ஒருவன் போட்டது வெள்ளரிக்காய். அதைக் காசுக்கு இரண்டாக விற்கச்சொல்லி, காகிதம் போட்டாண்டி வெள்ளைக்காரன்!!—என்ற பாட்டு, பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்திலே, பாடப்பட்டதாகச் சொல்வார்கள், 'கட்டப்பொம்மு' நாடகக் காதை சொல்லுகிறவர்கள். தோட்டத்திலே விளைந்த வெள்ளரிக்காயின் விலையை நிர்ணயிக்க வெள்ளைக்காரன் யார்?—என்பதிலே, தொனிக்கிறது, உரிமைக் குரல்! உள்ளங்குமுறிய அப்போதைய மக்களின் உணர்ச்சி தெறிக்கிறது, பாடலில்!

'கட்டப்பொம்மு' நாடகத்துக்குத் தலைமை வகிக்கிறார், காமராஜர்! நாடகமாடுகளா, என்ற காமராஜர் தான்!! கண்டாரோ இக்காட்சியை, நடத்துவோர் தான் வைத்திருக்கிறார்களோ நாடகத்தில். அறியோம். ஆனால், நாடு சிரிக்கிறது. கட்டப்பொம்மனின் வீராவேசத்தை வாழ்த்தப்போகும் இந்த 'வணங்காமுடிகள்' அரசிலே, வெள்ளரிக்காய் முதல் வெண்டைக்காய் வரையிலே, வரி போடப்பட்டிருக்கும் நேர்த்தியைக்கண்டு!! காலை காய்த்து மாலை விலைபோகாது, மறுநாள் தேங்கி, அடுத்த நாளும் யாரும் நத்தாவிடில், அழுகும் பொருள்கள் காய்கறிகள்; அவைகளுக்கு வரி போட்டிருக்கிறதய்யா, இந்த அரசு? என்று சொன்னால், ஆச்சரியப்படுவார்கள் மக்கள். கொல்லையில் காய்க்கும் கொல்லி! கூத்தாடிச்சிரிக்கும் கல்ரோஜா! கூட்டுக்குதவும்புடலை! கடலில் கிடைக்கும் மீன்! — வரியா, இவற்றிற்கு வரியா, என்று அதிசயத்துடனேயே, கேட்பார்கள். ஆண்ட வெள்ளையன், சுதந்திர வீரர்கள் அசராதிப்படி, சுரண்டிக்கொண்டு போனவன்! இந்தத் துணிக்கண்டத்து மண்ணைக்கூடச் சுரண்டிச் சுரண்டிச் சென்று இங்கிலாந்தைப் பெரிய நாடாக்கப் பார்க்கிறான், என்பாராம் சத்தியமூர்த்தி, பேசும்போது!! அவன்கூடத் துணியவில்லை—ஆனால், காமராஜருடைய காங்கிரசு அரசு, துணிகிறது—சட்டம் பிறப்பிக்கிறது—கட்டவேண்டுமாம்! கறிகாய் மீன் இறைச்சிக்கெல்லாம் வரி!!

அழகான மலர்! ஆரணங்கின் தலைமை அலங்கரிக்கும்போது, களிப்புத் துள்ளும், கணவனுக்கு!!—அந்த மலருக்கும் வரி!

அத்தான்! புடலங்காய் கூட்டுச் செய்தேன், முட்டை பொரித்தேன், முருங்கைக்காய் சாம்பார், கீரையைக் கடைந்தேன், என்று சொல்லிவிட்டு, கொண்டவன் முகத்தைப் பார்ப்பாளே, மலர்கிறதா என்று?—அந்தக் காய்கறிகளுக்கெல்லாம் வரி.

மீன்!—செத்தால், நாறும். ஒருநாள் போனால் பாழாகும். இதற்கும், வரி.

முட்டை! இறைச்சி!
பாவற்காய்! பால்!
தேங்காய்! மாங்காய்!
என்னென்ன 'தின்னும்' பொருள்களுண்டோ
அத்தனைக்கும் வரி! வரி!!

எங்கேயுண்டு இந்த அநீதி? அடுக்குமா! தடுப்பாரில்லையா! சரியா! தகுமா! தாங்குமா! ஐயகோ!—என்று, கடந்தகிழமை, நாடே கேட்டது. சென்னையிலே, நடைபெற்ற கண்டன ஊர்வலத்திலே, 'புரட்சிக்கு முன் ரஷ்யா' என்பார்களே, அதுதென்பட்டது. தலைகாய்ந்த தாய்மார்கள்! உடம்பு காய்ந்த கூடைக்காரர்கள்! நாளெல்லாம் சுமைதூக்கி, வீதி வீதியாய் அலைந்து, காலணாவும் அரையணாவும் தேடும் கவலை மிகக் கொண்டோர்! — கடைவைத்து, வியாபாரம் செய்வோர்!—அனைவரும், ஒன்று சேர்ந்து, சென்றார்கள். கடைகளை மூடினார்கள். நாட்டின் குரலை எதிரொலிப்பதுபோல, கடற்கரையிலே, கூட்டமும் போட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசினர்! எம்-எல்-ஏ.க்கள் கண்டித்தனர்! எம்மான், பெம்மான் காமராஜருக்கு, இன்னும் இரங்கவில்லை மனம்! சுப்பிரமணியரும் வெங்கட்டராமரும் சுற்றிவளைத்து விளக்கமளிக்கும் 'வித்தை'யினைச் செய்கிறார்கள்!!

"30,000 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்குத்தானே வரிபோடப்பட்டிருக்கிறது. வருமான வரி கட்டுகிறவர்களுக்குத்தானே இந்த வரி. இப்படிக் கட்டுகிறவர்கள் கொஞ்சம் பேர்தானே இருப்பார்கள். இது புரியாமல் எதிர்க்கிறார்களே? இதென்ன அர்த்தம்!!" என்று அரசாங்கச் சார்பிலே, அறிக்கைவிடப் பட்டிருக்கிறது. கொஞ்சம் பேர்தான் கட்டுவார்கள்! — என்றால், அதன்மூலம் அரசுக்கு அதிக வருமானம் கிடைக்கப்போவதில்லை, என்று அர்த்தமாகும். இப்படி அதிகமான வருமானம் இல்லாத ஒரு துறைக்கு வரிபோடுவானேன்! வசூலிக்க அதிகாரிகளை வைப்பானேன்!!—என்பது ஒருபுறமிருக்க, இப்படி யாருக்கு வரிபோட்டாலும் அந்த வரி யாருடைய, தலைமீது விழுகிறது என்பது தெரியாதா இந்த அரசுக்கு? விற்பனைவரி போடப்பட்ட ஆரம்ப காலத்திலும், இந்த அகராதியைத் தான் படித்தார்கள், ஆச்சாரியார் ஆட்சியில். போக்குவரத்து வரி அதிகமாக்கப்பட்டபோதும் இப்படித்தான் சொல்லப்பட்டது!! ஆனால், உண்மை

யில், ஒரு அரசு போடும் வரிகளையெல்லாம் தாங்கு வது யார்? பொது மக்கள்தான்!!

ஒரு அரசு, வரி விதிக்கிறது என்றால், எதற்கு விதிப்பது என்பதைத்தான் முதலில் தீர்மானிக்க வேண்டும். அந்த இடத்தில்தான் இவர்கள் ஆரம் பத்திலேயே தவறு செய்துவிட்டார்களென நாம் சொல்லுகிறோம்! சட்டமன்றத்திலும் நமது கழக எம். எல். ஏ.க்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் — வேண்டாம் என எடுத்துச் சொன்னார்கள்!!

**அழுகக்கூடியதும், அன்றாடம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தேவையானதுமான பொருள்களுக்கு ஏன் வரிபோட வேண்டும்? என்ன அப்படி அவசியம்? எல்லாவற்றிற்கும் 'வரி' போட்டுப் பணம் வசூல் செய்யவேண்டிய நெருக்கடி என்ன வந்துவிட்டது?**

போர் மூண்டுவிட்டது — அந்நிய நாட்டுடன் எதிர்க்கவேண்டும்—ஆயுதங்கள் தேவை—ஆகவே, எல்லோரும் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி வரி கொடுங்கள், என்று கேட்க நேருவதுண்டு. இது, 'இட்லர்' ஆட்சி என்றாலும், நெருக்கடிக்காகக் கேட்ப துண்டு. அப்படியென்ன நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது, காமராசருக்கு, அனைவரையும் கசக்கிப் பிழிந்து வரி கட்டச் சொல்ல! அதுவும், எதற்குப் போடுவது, ஏன் போடுவது என்பதுகூட இல்லாமல் ஏதோ போடுவோம் என்கிற போக்கில் பாலுக்கும் பச்சை மிளகாய்க்கும்கூட வரிபோடும் துணிவு வரவேண்டிய அவசியம் என்ன!!

இப்படிச் சொல்வதால், அரசுகள் வரி போடாமல் வாழவேண்டும் என்று நாம் சொல்லவில்லை. ஆறிலொரு பங்கு வாங்கி வாழ்ந்தது, அந்தக்காலம். இந்த ஜனநாயககாலத்தில், அம்முறை பயன்படாது. ஆனால், வரிமுறை என்பது, தாங்கக்கூடியவர்கள் முதுகுமீது ஏற்றக்கூடியசுமைமாக இருக்கவேண்டுமே ஒழிய, கூனிக் குறுகியவர்களின் குரல் வளையை நெரிக்கும் ஆயுதமாக இருக்கக்கூடாது! அதுமட்டுமல்ல, எவ்வளவு பணம் தேவைப்பட்டாலும், ஏதாவது ஒரு புதுவரியைப் போட்டோ, இருக்கும் வரியை அதிகமாக்கியோ சமாளித்துவிடலாம் என்கிற எண்ணமும் எழக்கூடாது!!

இதனால்தான், சட்டசபையில் சுட்டிக்காட்டப் பட்டது, தி. மு. க. சார்பில்.

**சர்க்கார் வரிமூலம் வசூல் பண்ணுவதை மட்டும் எண்ணாமல் வருமானம் வரக்கூடிய வழிகளையும் காணவேண்டும் என்று.**

எப்படி வருமானம் பெறுவது? — எனக் கேட்கலாம். அரசாங்கம் அங்காடிக்கடை ஆக முடியுமா! 'ரேஸ்' நடத்துவதா! பகுத்தறிவுப் போட்டியா நடத்தமுடியும்! எனக் கேட்போர் உண்டு.

**காமராஜர் அரசு டில்லியைத் தட்டிக்கேட்டு பணம் வாங்கலாம்!**

**ஏனெனில்,**
**வருமானவரி,**
**சுங்கவரி,**
**வியாபார இலாபம்,**
**பெறுவது டில்லி!!**

இப்படிச் சொன்னால், தி. மு. க. வாடை வீசுகிறது என்று, நல்லது என்றாலும், நாம் சொல்லுகிறோம் என்பதால், சிறிப் பாயக்கூடும், சிலர்கள். அதனால் தான், சட்டமன்றத்தில், தி. மு. க சட்டமன்றக் கட்சித் தலைவர், பணிவோடு ஒரு யோசனையைச் சொன்னார். அது,

**முதல் காரியமாக, பஸ் போக்குவரத்தைச் சர்க்காரே ஏற்று நடத்துவது என்பது!!**

ஒட்டை உடைசல் இருந்தாலும், என்னென்னவோ ஏற்பட்டாலும் கூட, சென்னை நகரத்தில் நடத்தப் படும் சர்க்கார் பஸ்போக்குவரத்துமூலம் இலாபம் தான் வருகிறது அரசுக்கு. ஒரு மாநிலமுழுவதும் இப்படி நடத்தினால், எவ்வளவோ இலாபம் பெறமுடியும்! இதனால்தான் யோசனையை வெளியிட்டோம். ஏன் செய்யக்கூடாது காமராஜர்? எங்கே நமக்கு வேண்டியவர்கள் 'பஸ் முதலாளி' எனும் இடத்தைத இழந்து விடுவார்களோ—நமக்கு 'தேர்தல் நிதி' வருவது குறைந்துவிடுமோ — என்கிற அச்சம் தவிர, இந்த அரசு, இந்த யோசனையைச் செயலாக்கத் தடையாக இருப்பது என்ன!!

**இதுபோல, இன்னும் பல தொழில்களை ஏற்று அரசு சம்பாதிக்க முடியும்!!**

மனம் இல்லையேஒழிய, மார்க்கங்கள் ஏராளம் உண்டு. அந்த வழிகளிலெல்லாம் அரசுக்குப் புத்தி செல்வதில்லை! எத்தனையோ தடவை எடுத்துச் சொன்னோம்; ஏன் ஒரு கவர்னருக்கு பல இட்ச ரூபாய்களைக்கொட்டி அழுகிறீர்கள், என்று? சட்டசபையில் ஒவ்வொரு தடவையும் கேட்டு வருகிறோம். அளிக்கப்பட்டபதில் என்ன? மவுனம் இல்லாவிடில் மமதையான ஏளனம்!!

இப்படிப்பட்ட நிலைமையில், 'உழைப்பின் வெற்றி' என்று சொல்லி, ஒரு சிலையை, சென்னைக் கடற்கரையில் நாட்டி (செலவு அரை இலட்சமாம்) உழைத்தால் எப்படி முன்னேறலாம், என்பதை மக்களுக்கு உணர்த்துகிறார்களாம். அந்தச் சிலையை ஒரு வெளி நாட்டான் பார்த்தால், இப்படியா உழைத்துத் தேயச் சொல்கிறார்கள் இந்நாட்டு மக்களை, என்று சிரிப்பான். நாட்டின் அலங்கோலம், அந்தச்சிலை எனலாம்! அலங்கோலமான நிலையிலுள்ள மக்கள், கூடை தூக்கிப் பிழைக்கிறவர்கள், குப்பி கழுவத் துடிக்கிறவர்கள், அங்காடிக் கடைவைத்து வாழ்கிறவர்கள், மத்தியதர மக்கள் அனைவரையும் 'உழைக்கச்' சொல்லும் அரசு, தானும் 'உழைத்து' பணம் தேட முயன்றால் என்ன! அதைவிட்டு, ஏழை எளியவர்கள் தலையிலேயே தொடர்ந்து கைவைப்பது, மொட்டையடிப்பது என்றால், எத்தனை நாளைக்குத் தான் தாங்குவது! எண்ணிப்பார்க்க வேண்டும் மக்கள்!!

★

# திருவரங்கத்திலே தீ!

திருவரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்குறித்து, சென்னை மேல் சபையிலே, அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தாராம், 'ஆண்டவன் விருப்பம்போலும் அது' என்று.

வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்புக் காரணமாக மண்ணெண்ணெயை உடலிலூற்றிக்கொண்டு தன்னை எரித்துக்கொண்டு சாக முயன்றாள் சாந்தியும் சானகியும் என்கிறது, தினஏடு! அக்கினிக்கும் வருணனுக்கும் மேலானவர், நமது எல்லாம் வல்ல பெருமாள், என்கிறது; புராண ஏடு!! எம்பெருமான், ஏன் 'தற்கொலை' செய்துகொள்ள 'விருப்பம்' கொண்டிருக்க வேண்டும் என்கிற கேள்வி எழும், அமைச்சரின் கூற்றுக் கேட்டோருக்கு.

அருகிலிருக்கும் அம்மையை அக்கினி தழுவ, ஆதிசேடனின் மூன்று தலைகள் தெறித்துவிழ, தன்னையும் நெருப்புச்சுட, இத்தனையும் தாங்கிக்கொள்ளும் 'விருப்பம்' ஏன் பூண்டாரோ, ஈசன்! ஒருவேளை நமது திருப்பெயர் பூண்டு, நமது திருக்கோயில்களையெல்லாம் பரிபாலிக்கும் அமைச்சராகியும், இந்த ஆளவந்தார்களால் நாட்டிலேதும் நன்மைகள் மலரவில்லையே, ஏழையும் இல்லாதவனும் ஏங்கித் தவித்து, 'ஏண்டா ஆண்டவா எங்களைப் படைத்தாய்?' என்று அனுதினமும் அலறுகின்றனரே! இப்படிப்பட்ட நாட்டில் நாமிருந்தென்ன, நாள்தோறும் நமக்குச் செய்வதாகச் சொல்லி அக்கார வடிசலும் ஆறுகாலப் பூசையும் நடத்திக் கோயில் பெருச்சாளிகள் கொழுக்கின்றனரே, எத்தனை நாளைக்குத்தான் இந்த அக்கிரமத்தைச் சகிப்பது! ஏனோ இந்த உலகிலிருப்பது என்றுகருதி இந்த முடிவுக்கு வந்தாரோ இறைவன்? அக்கினி புகுந்தால், அவனை அடக்கும் சக்திபெற்றவர், சிரங்கநாதன்! அக்கினியாஸ்திரம் பாய்ந்து வந்தால், வருணாஸ்திரத்தைவிடுத்து அதை அடக்கினார் சிராமச்சந்திரமூர்த்தி என்று அழகாக வருணிக்கிறார் இராமாயண காலட்சேப பாகவதர்!! வருணனும் அக்கினியும், வெள்ளையனுக்கு வேண்டுமானால், நீரும் நெருப்புமாக இருக்கலாம்.

அரங்கண்ணல்

நமக்கோ, அவையும் கடவுள் படையிலே உள்ளவர்கள், ஈசன்மார்களுக்குக் கட்டுப்பட்ட குட்டிக் கடவுள்கள். ஆண்டவனை நெருங்க நமது புராணங்களின்படி, அக்கினிக்குத் தைரியம் வராது. ஒருவேளை, ஆண்டவர்களின உலகிலும்; பூலோகத்தின் சாயல்படிய ஆரம்பித்து; ஆட்டிப்படைப்பவனை, அடங்கியவர்கள் எதிர்க்கும் நிகழ்ச்சிகள் நடக்கிறதோ! அதன் எதிரொலிதானோ, தீ பிடித்த, இச்சம்பவம்!!

நாத்தழும்பேறியவனே! நாத்திகா!!-என்று, ஐயம்கொள்வோர் மீது, பாயக்கூடும் பக்தவத்சலம் —அமைச்சர் பக்தவத்சலம்தான்! ஆண்டவன் பக்தவத்சலந்தான் இதைப்பற்றியெல்லாம் கவலைப் படுவதில்லையே!! — ஆலயத்துக்குள் ஏற்பட்ட தீவிபத்தை வைத்துக்கொண்டு, திரிக்க ஆரம்பித்து விட்டாயே, என்ன தைரியம் உனக்கு, என்று சீறவும்கூடும்.

தீ விபத்துக்குறித்து உண்மையில், நாமும் வருந்தவே செய்கிறோம். பக்தர்களுக்கு ஈசன் இரகத்தில் இப்படியொன்று ஏற்பட்டதே என்பதற்காகவருத்தம், ஏற்படலாம்! உருகிய தங்கமும், கருகிப் பொடியான வைரமும் இன்றில்லாவிடினும் ஒரு நாளைக்கு நாட்டின் களஞ்சியத்தைச் சேர வேண்டிய பொருள்களாயிற்றே! வீணாக நெருப்புக்கு இரையாயிற்றே, என்பதால் நாமும் வருந்துகிறோம்! காலையில் ஆரத்தி எதுவும் செய்யப்படவில்லையாம், ஆகவே எப்படித் தீப் பிடித்தது என்பதே ஆச்சரியமாக இருக்கிறது என்று அர்ச்சகர்களும் ஆலய நிர்வாகியும் தெரிவித்திருக்கின்றனர். 'அமைச்சரும் இதை ஒப்புகிறார். உண்மைக் காரணமென்ன என்று உடனடியாக அறிய முடியவில்லை, அனைவராலும். அமைச்சர், கோயிலுக்கு மட்டுமல்ல, கொட்டும் தீமைகளைக் களையும் போலீசுக்கும் மந்திரியாவார்! எப்படியேற்பட்டது என்பதை 'இரகசிய இலாகா' மூலம் கண்டுபிடித்து அறிவிக்கும் பொறுப்புமுண்டு!! இருந்தும், ஒரே வரியில், மேல் சபையில், 'ஆண்டவன் விருப்பம் போலும் அது' என்று கூறியிருக்கிறார்.

உதாரணத்துக்கெனச் சொல்வோம் — கோயிலமைச்சரின் நிர்வாகத்திலுள்ள ஒரு ஆலயத்தில் ஏராளமான தங்கமும் வைரமும் இருக்கிறது! அம்மனின் மூக்குத்தியையும் அய்யன் மீது கிடக்கும் ஆபரணங்களையும், அனுதினமும்

தொடவும் ரசிக்கவும் செய்கிறார் ஒரு அர்ச்சகர். ஆண்டவன் திருப்பணியிலீடுபட்டிருக்கும் அர்ச்சகர்கள் எல்லோரும் நல்லவர்களாக இருக்க முடியுமா? பெருச்சாளி குணம்படைத்த ஒரு தீயவன் தினசரி இந்த நகைகளைப் பார்த்துப் பெருமூச்செறிகிறான்!! ஒரு நகை போதும், அவன் வாழ்வுக்கு. எடுத்தால், சட்டம் கொட்டும்! இதற்காக ஒரு தந்திரம் செய்து, ஆண்டவனின் இருப்பிடத்தையே நெருப்புக்கு இரையாக்கிவிட்டு நீட்டிவிடுகிறான் தம்பி! — மறந்து விட வேண்டாம், உதாரணமாகத்தான் சொல்கிறோம் — அத்தீயவனை, எப்படியோ பிடித்தும் விடுகிறார்கள். வழக்கும் போட்டுவிடுகிறார் அமைச்சர். நீதிமன்றன்தின் முன்னின்று, "ஐயோ! நான் வேண்டுமென்று செய்யவில்லை. ஆண்டவன் விருப்பம்போலும் அது'' என்று சொன்னால் விட்டா விடுவார்கள்? கோயிலிலே தீமைகள் செய்தவன் மட்டுமல்ல, சமுகத்திலே அன்றன்றாடம் தவறுகள் செய்வோரெல்லாம், "ஆண்டவன்தானே உலகை ஆட்டிப் படைக்கிறவன். அவனன்றி ஓரணுவும் அசையாதன்றோ? எல்லா உள்ளமும் ஈசன் கோயில்தானே! நான் தவறு செய்யவில்லை. என்னையும் உங்களையும் ஆட்டிபபடைக்கும் ஆண்டவனின் விருப்பமபோலும் அது'' என்று விளக்கமளித்தால், விட்டு விடுவார்களா! அமைச்சர்தான் வாளா இருந்துவிடுவாரா!!

என்ன செய்வதென்று புரியாத நேரத்தில், யார்மீது பழிபோடுவது என்று தெரியாதசமயத்தில், ஆத்திகர்கள் என்போருக்குச் சுலபமாகக் கிடைத்துவிடுகிற ஒரு காரணப் பொருள் பரிதாபத்துக்குரிய பகவானதான். 'அவன்' மீது பழியைப்போட அஞ்சுவதில்லை, அடியார்கள்! எவ்வளவு எளிதாக அமைச்சர் முதல் அன்றாடம் காய்ச்சி வரையில் இந்தக் காரணத்தை எடுத்தெறிந்து விடுகிறார்கள்!! "எல்லாம் அவன் விருப்பம்'' என்றால் எதற்கு ஒரு சட்டசபை, எதற்கு ஒரு அரசு, எதற்குப் பற்பல ஏற்பாடுகள் எல்லாம்.

உண்மையாகவே ஆண்டவன் மீது பக்திகொண்டவர்கள் இருக்கிறார்கள்! அவர்களது நம்பிக்கையை, நாம் எள்ளிநகையாடத் தயாராக இல்லை! இதனால் அவர் தம் உள்ளம் புண்படுவது ஒன்றுதான் பலனாகக்கிடைக்குமே ஒழிய, அவர்களெல்லாம் பக்குவமடைய நாட்கள் பிடிக்கும். நமக்கு வருகிற ஆத்திரமெல்லாம், தங்களுடைய இயலாமைக்கும் தவறுதல்களுக்கும் ஆண்டவனை 'முகமூடி'யாக்க முயலுகிறார்களே. அவர்கள் மீது தான்.

மோட்சலோகம் நாடவும், மும்மலம் நீக்கவும், காட்டிலே தவம்புரியும் ஞானிகள்மீது நமக்கு வருத்தமில்லை! ஆனால், நாட்டில் எல்லா அக்கிரமங்களுக்கும் காரணகர்த்தர்களாக இருந்துகொண்டு, அதே சமயத்தில், ஞானிகள்போலவும் உபதேசம் செய்கிறார்களே 'ஆஷாடபூதி'கள், அவர்கள் ஆபத்தானவர்கள்! சமய சஞ்சீவிகள்! மக்களின் மத நம்பிக்கையை மூலதனமாகக்கொண்டு எத்திப் பிழைப்பவர்கள்!

இதோ ஒரு செய்தி, திருவரங்கம் உள்ள திருச்சி மாவட்டத்திலிருந்துதான் கிடைக்கிறது. முசிரி, லால்குடி தாலுகாக்களில் மூன்றாவது போகம் சாகுபடி நடந்திருக்கிறது! அங்குள்ள சம்பாப் பயிர்களெல்லாம், ஏதோ ஒரு நோய்க்கு இரையாகி வருகின்றனவாம். பயிரைத்தாக்கிப் பாழ் செய்யும் அந்த நோயின் காரணத்தைக் கண்டறிய, ஆடுதுறையிலிருக்கும் பயிர்த்தொழில் அதிகாரி விரைந்திருக்கிறார். என்ன பூச்சி? எப்படி சாகுபடியான பயிர்கள் திடீர்திடீரெனச் சாகின்றன என்பது புரியாமல் விழிக்கிறார்கள், விவசாயிகள். விபரம் தெரிய ஆடுதுறை அதிகாரியை அழைத்திருக்கின்றனர்.

'ஆண்டவன் விருப்பம்!' என்று விவசாயிகள் இருந்துவிட்டால், என்ன ஆகும்? போன அதிகாரியும் 'ஆண்டவன் விருப்பம்!' என்று சொல்லிவிட்டால் என்ன செய்யமுடியும்? பயிர்களை எடுத்து வைத்து பரிசோதித்து இதைக் கண்டுபிடிக்க முயல்கிறார், எந்த மருந்தைப் போட்டால் இதைத் தடுக்கலாம் என்கிற ஆலோசனைகளில் ஈடுபட்டிருப்பதாகச் செய்தி கூறுகிறது.

இப்படியொரு சிக்கல் ஏற்படும்போது ஆராயவும், கண்டறியவும் செய்யவே ஒரு நாட்டில் விஞ்ஞானிகள் இருக்கிறார்கள்! அரசும், இதுபோன்ற விஞ்ஞானிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது! பண்டித நேரு அவர்கள், இதற்காகப் பல கோடி ரூபாய்களைச் செலவழித்து வருகிறார். பெரிய பெரிய ஆராய்ச்சிக் கூடங்களையெல்லாம் கட்டி, வெளிநாட்டினரையெல்லாம் வரவழைத்து, இங்குள்ள விஞ்ஞானிகளின் திறமையை விரிவாக்கப் பல வகையாலும் முயலுகிறார். 'பத்மபூஷண்'போன்ற பட்டங்களை அளித்தும், பாராட்டுகளைக் வழங்கியும், நமது விஞ்ஞானிகளுக்கு ஊக்கம் அளிக்கபபட்ட வண்ணமேயிருக்கிறார்கள். இந்தியத் துணைக்கண்டத்திலேயே இன்றுள்ள சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவர் டாக்டர். கே. எஸ். கிருஷ்ணன்! அவரது பொறுப்பில்தான், இந்த உபகண்டத்தின் பற்பல விஞ்ஞான சாதனைகள் விடுக்கப்பட்டிருக்கின்றன. சென்ற சில திங்களுக்கு முன், அவருடைய படமொன்றைத் திறந்து வைத்து; புதுடில்லியிலே பாராட்டுகளைக் குவித்தார் பண்டித நேரு; ஆற்றலரசர்! அறிவின் சிகரம்! — என்றெல்லாம போற்றினார். அப்படிப்பட்ட மேதை, திருச்சி மாவட்டத்தில் பயிர்கள் பூச்சியால் பாழாகின்றன என்று செய்தி வந்த அதே கிழமை, சென்னைக்கு வந்தார், டில்லியிலிருந்து. ஆராய்ச்சி புரிய அல்ல! திருவல்லிக் கேணியிலேயிருக்கும் கலாச்சாரக் கழகத்திலே பேச!!

என்ன பேசினார் தெரியுமா? எப்படி அணு தண்டு செய்கிறார்கள், நமது விஞ்ஞானக் கழகம் என்னென்ன சாதனைகளைச் செய்தது, எப்போது நாமும் சந்திர மண்டலத்தை எட்டிப்பிடிக்க முயலலாம் — இதுபோன்றவைகளைதானே. அந்தப் பெரும் விஞ்ஞானியிடமிருந்து எதிர்பார்ப்போம். ஆனால் அவர், இவைகளைப்பற்றி வாய்திறக்கவில்லை! பக்தியின் அவசியம்குறித்துப் பழைய புராணங்களிலிருந்தும், திருவாய்மொழியிலிருந்தும், சிராமானுஜர் வாழ்க்கையிலிருந்தும் உதாரணங்களைக் காட்டி உருக உருகப் பேசினாராம்!

ஒரு துணைக்கண்டத்தின் விஞ்ஞானி — அந்தத் துணைக்கண்டம் அவர் மூலம் பல நன்மைகளை எதிர்பார்த்து மிகப் பெரிய

ஆராய்ச்சிக் கூடத்தின் அதிபராக வைத்திருக்கிறது — அவர், பேசுவது பக்தியின் அவசியம் பற்றி.

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் இங்கே பக்தியின் அவசியம் குறித்துப் பேசிய செய்தியைப் பிரசுரிக்கும் அதே 'இந்து' ஏட்டின் இன்னொரு பக்கத்தில், பாரிசிலிருந்து வந்த மற்றொரு தகவலும் வெளி வந்திருக்கிறது. தேனீக்களைப்பற்றியும், அவைகள் எப்படியெப்படிப் பேசுகின்றன? அவைகளை உணர்ந்து நாமும் அறியமுடியும் என்பது வரையிலே காரல்வான் பிரிஸ்ச் என்கிற ஆஸ்திரேலிய விஞ்ஞானி கண்டுபிடித்தமைக்காக, ஆயிரம் பவுன்கள் பரிசுபெற்றிருக்கிறார்! 'கலிங்கப் பரிசு' என்கிற பெயருடன், இந்தப் பரிசினை அவருக்கு, இந்தியா அளித்திருக்கிறது! விஞ்ஞானத்தின் மீதுள்ள ஆர்வத்தையும், உலக அறிவாளர்களை ஆதரிக்கும் பண்பையும் காட்டிக்கொள்ள, இப்படிப் பரிசுகள் அளிக்கப்படுகிறது. ஆனால், நமது விஞ்ஞானி, இங்கே பக்தியின் அவசியம்பற்றிப் பேசுகிறார்! விஞ்ஞான சாதனைகளை விரும்பி, அரசு தரும் பட்டத்தையும் பணத்தையும் அவர் விட்டுவிட்டாரோ என்றால், இல்லை! அது ஒருபக்கம். இது இன்னொருபக்கம்.

அவரைத் தலைவராகக்கொண்ட ஆராய்ச்சிக் கூடத்தில் "ஆண்டவன் விருப்பம் எதுவோ அப்படி நடந்துவிட்டுப்போகிறது. ஏன் நமக்கு இந்த ஆராய்ச்சியெல்லாம்?" என்று எவனாவது ஒரு மாணவன் சொன்னால், உடனே, அவனை 'டிஸ்மிஸ்' செய்யத்தயங்கமாட்டார், கிருஷ்ணன். ஆனால், திருவல்லிக்கேணியிலே வந்து, பக்தாமிர்தம் பொழிகிறார்! பக்தியின் மேன்மைபற்றிப்பேசுகிறார்!!

இதனால், யாருக்கு நன்மை? இப்படிப்பட்டவர்களை நம்புவதால் யாருக்கு நலன்? என்று எண்ணும் போதுதான், நமக்கு, அச்சமும் ஐயமும் வருகிறது. ஆண்டவனைப் பற்றி அனுதினமும் சங்கராச்சாரியார் பேசிவிட்டுப் போகட்டும்! அது அவருடையவேலை! ஆனால், திடீர் திடீரென்று, வேறுவேலைகளிலிருக்கும் ஏனையவர்களும், இறங்கிவிடுகிறார்கள் இப்பணியில்.

இவர்களெல்லாம், பக்திப் பாதைப் பிரச்சாரத்திலீடுபடுவதைப் பார்க்கும் சங்கராச்சாரியார் போன்றவர்கள், தங்கள் வேலையை மறந்துவிட்டு, விஞ்ஞான சாதனைகளைப்பற்றியும் நவயுகத்தின் மேன்மையைக் குறித்தும் பிரசங்கமாரி பொழிய ஆரம்பிக்கிறார்கள். இந்த விசித்திரம், கொஞ்சக்காலமாக அதிகமாகியே வருகிறது! நாத்திகத்தை மட்டம் தட்டுகிறோம், என்பது இவர்களெண்ணம்—நாமும் நவயுகப் போக்குக்குத் தக்கபடி மாறி வருகிறோம் என்பது அவர்களெண்ணம். இப்படி ஒரு சூழ்நிலை, உருவாகி வருகிறது. விளைவு இரண்டும் கெடும் என்பது தவிர, நாட்டுக்கோ மக்களுக்கோ இலாபம் கிடைக்கப் போவதில்லை! தத்தமதுவேலையை விட்டுப் பாதைமாறி, தங்களையும், தங்களை நம்பும் நாட்டையும் பாழாக்க உதவுகின்றனர், இவர்கள்.

இல்லையெனின், இவ்வளவு சுலபமாக, 'ஆண்டவன் விருப்பம்போலும்' - என்று சொல்லி, தனது அபார பக்தியை நிலைநாட்டிக்கொள்ள முயல்வாரா பக்தவத்சலம்? அந்த ஆசை ஏன் வரவேண்டும் அவருக்கு? உண்மையான பக்தர்கள் என்று கருதப்பட்ட இராமானுஜர் உள்ளத்திலும், திருமங்கை ஆழ்வார் போன்ற பக்தர்கள் கனவிலும், ஸ்ரீமந்நாராயணன் வந்து எவ்வளவோ சொன்னதாகச் சொல்லுவார்கள். பக்தி தனக்கும் உண்டெனக் காட்டிக்கொள்ளும் பக்தவத்சலத்தின் கனவில், பகவான் வந்து, தீவிபத்துக்கான காரணத்தை அடுத்த மேல்சபைக் கூட்டத்துக்குள், அறிவிப்பார் என்று எதிர்பார்க்கிறோம். உண்மையான பக்தராக இருந்தால், இது நடக்கும்! உண்மையான பக்தராயிருந்தால்தானே என்கிறீர்களா? அதுவும் சரி தான்!!

★

# திருவள்ளுவர் நாள்

தமிழகம், இலங்கை, வட இந்தியா, மலாயா, சிங்கப்பூர், பர்மா, தென்னாபிரிக்கா, பீச்சித்தீவு, முதலிய பல நாடுகளிலும் வாழும் தமிழர்கள் ஒன்றுபட்டுத் திருவள்ளுவருக்கு வைகாசித் திங்களில் விழா எடுக்கிறார்கள். கொழும்பு, சென்னை, திருச்சி, டில்லி, சிங்கப்பூர், பி. பி. சி. (இலண்டன்) முதலிய வானொலிநிலையங்களும் எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி வருகின்றன.

ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளன்று தமிழர்கள் ஒவ்வொருவருடைய வீடும் விழாக்கோலம்கொள்ளல் வேண்டும் என்பதே எமதுநோக்கமாகும். எனவே உலகெலாம் வாழும் தமிழர்களை ஆண்டுதோறும் திருவளளுவர் திருநாளைத் தத்தம் வீடுகளிற் கொண்டாடுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம். இப்பெருஞ் செயலை நிலைநாட்டுதற்கு ஆவன செய்தல் தமிழ் கூறு நல்லுலகெங்குமுள்ள தமிழ் சங்கங்கள், மன்றங்கள் கல்வி நிலையங்கள் முதலியவற்றின் முதற் கடமையாகும்.

கி. பி. 1969-ல் திருவள்ளுவர் தொடர் ஆண்டின் ஈராயிரம் ஆண்டு நிறைவினை எங்குஞ் சிறப்பாகக் கொண்டாடுமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம். திருவள்ளுவர் தொடர் ஆண்டைத் தமிழர்கள் யாவரும் வழக்குக்குக் கொண்டுவருதலும் இன்றியமையாதது. திருக்குறள் இன்னும் மொழிபெயர்க்கப்படாத மொழிகளில், அதனை மொழி பெயர்ப்பித்தற்கு அம்மொழிகள் வழங்கும் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் முயலவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற திருக்குறளைச் செய்தருளிய திருவள்ளுவருக்கு உலகெலாம் வாழும் தமிழர் எவ்வித வேறுபாடுமின்றி ஒன்றுபட்டு ஆண்டுதோறும் ஒரு நாளிற் பெருவிழா எடுக்கிறார்கள் எனும் புகழுரையை நிலைநாட்டுதற்கு உலகெலாம் வாழும் தமிழர்கள் ஒன்றுபடுவோமாக. வாழ்க தமிழ்மறை! வளர்க தமிழினம்!

கா. பொ. இரத்தினம் எம். ஏ.,

பி. ஓ. எல்.

கொழும்பு.

★

# 'மைனர் மன்னார்சாமி!'

சிக்கனமாயிருங்கள், வீணாகச் செலவு செய்யாதீர்கள்; பணத்தை மிச்சப்படுத்துங்கள். தேசியசேமிப்பில் சேருங்கள். நாட்டின் பற்பல திட்டங்களுக்கு உதவியவராவீர்கள்.

வயிற்றைக்கட்டுங்கள். வாயைக் கட்டுங்கள். வாழ்க்கைத் தரம் உயரவில்லையா? சொல்லாதீர்கள். பாவம், சம்பளம் அதிகம் வேண்டுமா? கேட்காதீர்கள்; தேசத் துரோகம்.

உழைத்து உழைத்து உருக்குலைந்து, ஒட்டிய வயிறும் பஞ்சடைந்த கண்களும் கொண்டவனாகக் காட்சி அளிக்கின்றானே ஏழை—இந்நாட்டின் உயிர்நாடி—அவனிடம் சொல்லும் உபதேசம் இத்தகையது.

இந்திய நாட்டின் பிரதமர்—பண்டித ஜவஹர்லால் நேரு, இல்லாமை, போதாமை என்றெல்லாம் ஏழை மக்கள் சற்று உரத்த குரலில் பேச முற்படும்போதெல்லாம், மேற்கண்ட திவ்விய உபதேசங்களைக் கூறத் தவறுவதே கிடையாது; தயங்குவதும் கிடையாது.

இன்றைய பொழுதை எப்படியோ கழித்துவிட்டோம், நாளைப் பொழுதை எப்படிக் கழிப்பது என ஏங்கிப் பெருமூச்சு விட்டு, உள்ளம் சோர்ந்து, உடல் நைந்து நாட்களைக் கழிக்கும் தொழிலாளர் வர்க்கத்தினருக்குக் கூறும் சிக்கன உபதேசம் இவை.

ஆனால், இந்திய உபகண்டத்தின் ஆட்சிப்பீடத்திலிருக்கும் காங்கிரசு அரசாங்கமும், அதன் ஆணையை சிரமேற்தாங்கி நடக்கும் பிற இலாகாக்களும் 'பெரியவரின்' போதனையைப் பின்பற்றுகின்றனவா எனின், இல்லை என்றே திட்டவட்டமாகக் கூறிவிடலாம்.

அரசாங்கம் ஏற்று நடத்தும் எல்லாத் தொழிற் துறையிலும் பண மோசடி, வீண் விரயம், அனாவசியச்செலவுகள் இலட்சக் கணக்கில் கோடிக்கணக்கில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்றன.

அரசாங்கத் தணிக்கைக் குழு ஒவ்வொரு முறையும், அரசாங்கத் தொடர்புள்ள நிர்வாகத்தில் நடைபெற்று வரும் பண மோசடி கோடிக்கணக்கிலிருப்பதாகப் புள்ளிவிவரங்களுடன் அறிக்கை சமர்ப்பிக்கின்றது.

**அட்சயன்**

அனுபவக் குறைவு காரணமாக இது நேர்ந்துவிட்டது என்ற சாக்குக்கூறி, சம்பந்தப்பட்ட மந்திரிகளும் சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளும் தப்பித்துக்கொள்கிறார்கள் எனினும், விரயமாவது, ஏழை எளியவர்களின் உழைப்பால் உருமாறிய பணம் என்று எண்ணும்போதுதான் காங்கிரசு அரசு "மைனர் மன்னார்சாமி" போக்கில் உள்ளதே என வருந்தவேண்டியிருக்கிறது.

பொறுப்புமிக்க ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு ஆண்டும் பணம் பாழாகும் படலம் நடைபெற்றுக்கொண்டே வருகின்றதெனின், இதனை என்னென்று கூறுவது? இத்தகைய பெரிய அளவில் மக்கள்பணம் பாழாக்கப்படுகிறதெனின், அதன் காரணகர்த்தாக்கள் யார்? என்ன தவறு காரணமாக ஏற்பட்டது? அதன் பொறுப்புள்ளவர் தக்க பதில் அளித்திருக்கின்றனரா இதுவரையில்? இல்லை. மாறாக ஐந்தாண்டுத் திட்டங்கள், அணைக்கட்டுகள், கதர் அபிவிருத்தித் திட்டம், இவ்வாறு பல துறையிலும் மக்களின் வரிப்பணம் பாழாகிக்கொண்டே உள்ளது.

சிக்கனத்தைப்பற்றி சிலாகித்து மக்கள் மத்தியிலே பேசிடும் சிலர்களின் உண்மை வடிவத்தை திரு. பார்க்கவா என்ற காங்கிரசு உறுப்பினரே சென்ற வாரம் அம்பலப்படுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பு இடங்களுக்கு விநியோகிக்கப்படும் சோபா, அலமாரி, தட்டி, நாற்காலி ஆகியவைகள், வெளியில் விற்கப்படும் விலைக்கு ஒன்றுக்கு இரண்டுமடங்கான விலையில் வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்படுகின்றனவாம்' சோபா, நாற்காலி 'செட்' ஒன்றிற்கு விலை ஐந்நூறு ரூபாய். வெளியில் கிடைக்கும் விலை இதில் சரிபாதியேதான். ஒவ்வொரு உறுப்பினருக்கும் அளித்துள்ள மர அலமாரிகளின் விலை ரூபாய் நானூறு. ஆனால் மர அலமாரியைவிட உறுதியானதும், நீடித்த உழைப்புள்ளதுமான எஃகு அலமாரிகளோ ரூபாய் நூற்று எழுபதுக்கே கிடைக்கின்றனவாம்.

ஏன் இந்த அளவில் விலை கொடுத்து வாங்கியாகவேண்டும்? வெளியில் விற்கும் விலையைவிட அரசாங்கம் கொள்முதல் செய்யும் போதுமட்டும் இரட்டிப்பு விலை கொடுப்பானேன்? இது வீண் தண்டச் செலவில்லையா? இதைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளது'' என்பதாக அறிவித்திருப்பவர் எதிர்க்கட்சிகாரர் அல்ல;

ஆளும் வர்க்கத்தைச் சார்ந்த நண்பர்.

"சர்க்காரின் செலவினங்களில் பெரும்பாலானவை ஒன்றுக்கு இரண்டாக உள்ள நிலைமை இந்த நாட்டுக்குக்கட்டுபடியாகாது. வரிப பளு ஒருபுறம்; உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் கடனாக வாங்கிச் சுமத்தும் பளு ஒருபுறம் மக்கள் மீது விழுகிறது. இப்படியெல்லாம் திரட்டும் பணத்தை ஒன்றுக்கு இரண்டாகச் செலவுசெய்வது எப்படி நியாயமாகும்?"

"செலவு என்பது நமது சர்க்கார் என்பதாலேயே கெட்டது நல்லதாகிவிடாது. சோஷலிசம் என்ற கவர்ச்சிகரமான இலக்கைக் காட்டி, அதன் பெயரால் சர்க்கார் தமது பொறுப்பின் வரம்பை விரிவாக்கிக்கொண்டே போனால் தண்டச் செலவு பெருகி இப்போதைய தலைமுறையினரையும், இனிவரும் சந்ததிகளையும் மீளாத கடனில் ஆழ்த்துவதுடன்; தேசத்தின் பொருளாதார சக்தியைச் சிதைத்து நீங்காத தீமையை விளைவிக்கும்"

இவ்வாறு கடிந்து எச்சரிக்கை செய்திருப்பது மதுரைப் பதிப்பு 13—3—58 'தினமணி' யாகும், ஆளுங்கட்சியின் அலங்கோலத்தை, ஆணவப் போக்கினை, ஊதாரித்தனத்தை, தான்தோன்றி நடத்தையை டம்பச் செலவினங்களை, நாட்டின் நலன் கருதித்திருத்தி அமைக்கச் சொல்கிறார் காங்கிரஸ் எம். பி.

ஆட்சிப்பீடத்தினருக்கு 'ஆமாம்சாமி' போடும் பத்திரிகையோ 'தீயவனே திருந்து' எனக் கட்டளை பிறப்பிக்கிறது.

மைனர் மன்னார்சாமி ஊதாரித்தனமாகச்சொத்தைப்பாழ்படுத்துவானாயின் ஊரார் எள்ளிநகையாடி "காலிப் பயல்" என்று இழிமொழிகளால் கூறும் அளவிற்குப் பணத்தைப் பாழாக்கி விடுகிறானே, அதுபோல, பொறுப்புள்ள அரசாங்கமும் இத்தகைய வீண் செலவினங்களை மேலும் மேற்கொள்ளாது செம்மையாக இருக்கட்டும் என்பதாகவே பொதுமக்கள் விரும்புகிறார்கள்.

டில்லி செவிசாய்க்குமா?

அல்லது,

மைனர் "மன்னார்சாமியாக"வே நீடிக்குமா?

★



# நாடும் பேரும்

—சி. சரோஜினி—

கடாரம் வென்றான், ஈழம் வென்றான் என்று இலக்கியங்களில் படிக்கிறோம். அட்லசைப் புரட்டினால் அவைகள் இருக்காது. இன்றைய பர்மாவும், இலங்கையுமே முறையே அன்றைய கடாரம், ஈழம். அதேபோல் யவனம் என்பது இன்றைய கிரேக்க நாடும் பிற்கால ஆராய்ச்சியின்படி அரேபியாவும் சேர்ந்த பகுதிகள். சீசர் வென்ற "கால்" நாடு இப்போது இல்லை. மத்திய ஐரோப்பிய ஆல்ப்ஸ் மலையைச் சார்ந்த நாடே கால். ஏறக்குறைய இன்றைய பிரான்சு.

சரித்திரப் புகழ்வாய்ந்த மெசபடோமியா நாடு இன்று ஈராக்காக இருக்கிறது. பைபிளின் பழைய ஆகம அதிசயங்கள் பல நிகழ்ந்த நாடு பாபிலோனியா. கி. மு. 5ம் நூற்றாண்டில் சைரஸ் மன்னனால் பிடிக்கப்பட்டுப்பெர்சியாவாக மாறி இப்போது ஈரானாக இருக்கிறது. ஈரான் என்றதும் அதன் எண்ணெய் வளமும், அந்த ஆங்கில எண்ணெய்க் கம்பெனிகளை தேசியமயமாக்கிக் கஷ்டத்திற்கு ஆளான அதன் பிரதமர் முசாதிக்கும் ஞாபகத்திற்கு வரும். ஒரு காலத்தில் நீதிவேந்தன் சாலமோன் ஆண்டநாடு பாலஸ்தீனம்; கிறித்தவர்களின் "புண்ணிய பூமி" இன்று சிதறி இஸ்ரவேலாகவும், ஜோர்டனாகவும் இருக்கிறது.

ஆங்கில நாட்டைச் சரியான முறையில் கூறவேண்டுமானால் யுனைடெட் கிங்டம் என்றே கூற வேண்டும். இங்கிலாந்து என்பது அந்தத்தீவின் தென்பகுதி மட்டும்தான். கிரேட் பிரிட்டன் என்றால் இங்கிலாந்து, ஸ்காட்லந்து, வேல்ஸ் மற்றும் சிறிய தீவுகளான ஆர்க்னி, செட்லண்டு, வைட் முதலியன அடங்கிய பகுதிகள். யு. கே. என்றால் கிரேட் பிரிட்டன், வடக்கு அயர்லந்து, மான் தீவு முதலிய எல்லாம் சேர்ந்ததுதான். பார்லிமெண்டில் இயற்றப்படும் சட்டம் எல்லாவற்றிற்கும் சேர்த்துத்தான். ஆனால் வட அயர்லாந்தில் மட்டும் வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய ஒரு சட்டசபை உள்ளது.

சில நாடுகளை அவைகளின் இருப்பிடத்தைக் கொண்டு ஒரு பொதுப் பெயரால் அழைப்பதுண்டு. மேற்கிந்திய தீவுகள் என்பவை வட அமெரிக்காவில் கீழ் பகுதியில் பரவலாக இருக்கும் சுமார் 12 000 தீவுகளைக் குறிக்கும். அவைகளில் 185 தீவுகளில்தான் மனிதர்கள் வசிக்கிறார்கள். அவைகளில் முக்கியமானவை கியூபா, ஜமெய்கா, போர்ட்டோ ரிகோ, பஹாமா, டிரினிடாட் பெர்முடா ஆகியவைகள்.

கிழக்கிந்தியத் தீவுகள் எனப்படுபவை தென் கிழக்கு ஆசியாவில் பூமத்திய ரேகையின் இருமருங்கிலும் உள்ள போர்னியோ, சுமத்ரா, ஜாவா, பாலி, மொலுக்காஸ், நியூகினி முதலியன.

தென் அமெரிக்காவில் உள்ள பல நாடுகளிலும் மேற்கிந்திய தீவுகளிலும் அதிலுள்ள மக்கள் பிரஞ்சு, ஸ்பானிஷ், போர்ச்சுகல் இவைகளையே பேசுகிறார்கள். அந்நாடுகளைப் பொதுவாக லத்தீன்

(12-ம் பக்கம் பார்க்க)




சென்ற இதழ் தொடர்ச்சி....

இன்பத்தையும் துன்பத்தையும் ஒரே வயிற்றில் பிறந்த, இரட்டைக் குழந்தைகள் என்கிறார்கள். இடும்பைக்கு இப்பொழுதுதான் அறிமுகமாகி இருக்கின்றேன். என்னை அது எங்குகொண்டுபோய் விடுமோ அறியேன். எந்த வலியையும் பொறுத்துக் கொள்ளலாம். அப்பப்ப, நெஞ்சில் ஒரு அங்குசத்தை வைத்துக்கொண்டு, பார்க்கமுடியாமல் படுகின்ற இதய வலிக்கு எதுவுமே ஈடாகாது; பொறுக்கவும் ஆகாது. பைத்தியம் பிடித்துவிட்டாலும் ஆச்சரியமில்லை!

நானவளைப் பிரிந்து நடந்து வந்துவிட்டேன். அழகுவல்லியை அத்துடன் மறந்துவிட்டேன் என்று பொருளில்லை. கண்போல் எனை வளர்த்த தந்தையோ, இன்னுமென்னைக் காணாமல் துடியாய்த் துடித்துக்கொண்டிருப்பார். கிராமத்தில் தெரிந்தவருக்குக் கடனாகக் கொடுத்திருந்த பணத்தை, வாங்கிவரச் சென்ற மகன் வந்து சேராமையால் ஏற்பட்ட வருத்தம், அவரை வாட்டிக்கொண்டு இருக்கும். உணர்கின்றேன். இருந்தாலும் என்ன செய்ய! நெஞ்சை அவளுக்குக் கொடுத்துவிட்டேன். நிம்மதிக்கு விரோதியாகிவிட்டேன். நேராக வீடு நோக்கிச் செல்ல இஷ்டமில்லை; கஷ்டமாக இருந்தது. அமைதியை நாடி, கடற்கரையை நோக்கிக் கால்வலிக்க ஓடிக்கொண்டிருந்தேன். மருத்துவமனைக்குச் செல்லலாம் என்றாலோ, மனக்கவலையை மாற்ற அங்கேது மருந்து? இந்த உடம்பு இருக்கிறதே; அது நீரின் மேலெழுதிய எழுத்திற்கு ஒப்பாகும். பயக்கிடும் இளமைப் பருவம், தண்ணீரில் உண்டாகும் குமிழி எனலாம்.

அதையெல்லாம் நினைத்துக் கொண்டு பேசாமல் இருக்க முடியவில்லை.

யாழினும் இனிய குரல்—மயிலினும் சிறந்த சாயல்—வீசும் இன்பத் தென்றல்—பேசும் பச்சைக் கிளி—ஆடும் பசுந்தோகை மயில்—ஓடும் புள்ளிச் சிறுமான்—இப்படியெல்லாம் சொல்லலாம். இன்னுமவள் எழிலைப் பற்றிப் பேசிக்கொண்டே போகலாம். இனிக்குமே தவிரக் கசக்காது. காமுகர்கள் கண்ணில் தவறிப்பட்டு விட்டால், காரிகையைத் தலைமேலேயே தூக்கிவைத்துக் கொள்ளுவார்கள். தரையில் விடக்கூட மாட்டார்கள். கேலி செய்தால் 'பரமசிவனை'க் காட்டுவார்கள்.

**வி. ஆர். துரை**

அதற்கென்றே அலையும் அவர்கள் காரியம் முடிகிற வரையில் காலைப் பிடிக்கவும் செய்வார்கள்.

இதயம் திறந்து பேசுகின்றாள் என்னைத் தன்னுயிரினும் மேலாகவே நேசிக்கிறாள் சிரித்துச் சிரித்துவிளையாடுகின்றாள். சிந்தையைக் கிளறுகின்றாள். சிரிக்க மாட்டேனா என்று ஏங்குகின்றாள். சிரிக்காமை கண்டு வாடுகின்றாள். சிறுவனைக் கண்டு சாகின்றாள். சொந்தமாக்கிக் கொள்ளவே முடிவாகப் பார்க்கின்றாள். எவரும் தவறு செய்யலாம். எல்லோருமே அதற்குப் பலியாகலாம். அது இயற்கை. இன்னின்னவர்கள் தவறைச் செய்யலாம். இவரிவர்கள் தவறே செய்யக்கூடாது என்ற நியதியெல்லாம் கிடையாது. அதிலும் ஆசிரியன் என்போன் தவறைச் செய்தால், அதைவிட மோசம் வேறெதுவுமே இல்லையென்று விமர்சனம் செய்வோருண்டு. அவன் மட்டுமென்ன, ஆகாயத்திலிருந்தா குதித்துவிட்டான்? இல்லை, எம்பெருமானால் நேராகத் தனியாகப் பூலோகத்திற்கு அனுப்பப்பட்டவனா? எல்லோரையும் போலவே அவனும் மனிதன்தான். இது தெரியாமல் போய் விடுகின்றது சிலருக்கு! தங்களுடைய மேதா விலாசத்தைக் காட்டிக் கொள்ளுகின்றார்கள். தெரியாமல் செய்துவிட்டதைத் தெரிந்துகொண்டபோது, திருந்திவிடுவதே புத்திசாலித்தனம். அறிந்தும் அப்படிச் செய்வதையே தொழிலாகக் கொள்பவன், மனிதன் அல்ல! காட்டு மிருகம்!! நல்லவர்களாகக் கெட்டவர்களையும் மாற்ற முடியுமென்று நம்புகின்றேன். ஏன்? நான் அவளை...?

ஆறு கல் நீளம் கொண்டது அழகுடையது. புவியிலேயே இரண்டாவதென்று, நாமெல்லாம் பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் உரிமையுடையது. அடையாற்றிலே முடிகின்றது. இராயபுரத்திலே ஆரம்பமாகின்றது. அந்த எழில்மிக்க மரீனாவிற்கு—கடற்கரைக்கு வந்துவிட்டேன். உல்லாசக் காட்சிகளுக்கு அங்கே ஒன்றும் குறைச்சலில்லை. ஆணைப் பெண்ணும், அரிவையை அவனும் அணைத்த வண்ணம் நடைபோடுகின்றார்கள். அது நாகரிகம்! தவறென்று சொல்லக்கூடாது. அருகருகே தலைவனும் தலைவியும் அமர்ந்து, காதல் தேரில் ஏறி மெய்மறந்து, கதை கதையாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அண்டையிலிருப்போரைப்பற்றிக் கவலைப்படவில்லை. அதோ, ஆனந்தத் தென்றல் தாலாட்ட, அலை

வந்து காலை முத்தமிட, சிலையா ளின் மடியிலே தலைவைத்து, முளைக்கும் நிலா முகத்தையே சலிக்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறான். அண்மையில்தான் திருமணம் ஆகியிருக்கவேண்டும். இன்பத்தின் வாசலிலே அடியெடுத்து வைத்திருக்கிறார்கள். வாழ்க, அவர்கள்.

கடற்கரையின் விளையாட்டைக் கண்டு, வேதனைக்கடலில் விழுந்துவிட்டேன். யாரையும் நோக்காமல், எதையோ பறிகொடுத்து விட்டதைபோல் இரைச்சலிடும் விரிந்த கடலைப் பார்த்தேன். ஒரு பெரிய அலை வந்தது. கட்டுமரம் மறைந்தது. கயல் பிடிக்கும் செம்படவர் எங்கே? அதோ, உயிருக்கஞ்சாமல் நீந்துகின்றார்கள். பிடித்துக் கொண்டார்கள். கரைக்கு வெற்றியுடன் திரும்பிவிட்டார்கள். அப்படியே நானும் என் துன்பத்திலிருந்து இன்பமெனும் கரையேறுவேனா? அமைதியை நாடிவந்தேன், அதைப் பெருமலேயே வீடு திரும்புகின்றேன். என்னைப் போன்றவர்கள் உலகத்திலேயே பெரிய துன்பமாக, காதலனும் காதலியும் பிரிந்து கண்ணீர் வடிப்பதைத்தான் கூறுவார்கள்.

ஒரே நொடியில் கொண்டுவந்து, வீட்டின் முன்னாலே நிறுத்திவிட்டான். அப்பப்ப, என்ன வேகம்! கண்ணை மூடிக்கொண்டு காற்றாக வருவதால்தான் கவிழ்கிறார்கள். மெதுவாக ஓட்டப்பா என்றாலும், மேகத்தை எட்டிப் பிடிப்பதைப் போலவே டிரைவர் பறக்கிறான். எடுத்து நோட்டைக் கொடுத்துவிட்டு, நொந்த உள்ளத்தோடிருக்கும் தந்தையின் முன்னிலையில் நின்றேன். மழை கண்ட பயிர் போல மகனைக்கண்டு உளம் குளிர்ந்தார். அங்கிருந்தவரை அறிமுகப்படுத்தினார். "இவர் பெற்ற மகள்தான சாயாதேவி. மாடியில் உறங்குகிறாள்" என்றார்.

மணல் வீடுகட்டி, மரப்பொம்மை வைத்துச்சின்னக் குழந்தைகளாக இருந்தபோது சண்டையே போடாமல் மணலுக்குச் சென்று விளையாடுவோமாம் பொம்மைக் கல்யாணமும் நடக்குமாம். ஒரு முறை தந்தையார் கதையாகச் சொல்லியிருக்கிறார். காணவேண்டும் என்ற ஆசையோடும் ஆர்வத்தோடும், படிக்கட்டுகளில் பாய்ந்தோடினேன். அதைக் கண்டு சிரித்த தந்தையைக்கூட நான் திரும்பிப் பார்க்கவில்லை. என் எண்ணமெல்லாம் அங்கேயல்லவா பதிந்து கிடக்கிறது! எண்ணற்ற வருடங்களாக எதிர்பார்த்துக் கிடந்த ஒன்று, நிறைவேறும் காலம் வந்துவிட்டதே என்ற மகிழ்ச்சி போலும் அவருக்கு.

அழகாகத்தான் இருப்பாள். நல்ல சிவப்பாகவும் இருப்பாள். நிறமா முக்கியம்? குணத்திலல்லவா பெருமை அடங்கி இருக்கிறது. ஆசையோடு பேசலாம். அமுதை வாரி உண்ணலாம். தேனுடலைத் தீண்டலாம். தித்திக்கும் மொழி கேட்கலாம். அதற்குள் இப்படிப்பல எண்ணங்கள் அறைக்கருகில் வந்துவிட்டேன். தென்னாட்டு விஞ்ஞானி ஜி. டி. நாயுடு அவர்களின ரேடியோ பாடிக்கொண்டிருப்பது கேட்டது. இன்னிசை பாட — எழிலரசி ஆட இன்பமாகக் காலம் கழிக்கிறாளோ என நினைத்து, அவளுக்குத் தெரியாமல் அதை மறைந்திருந்து ரசிக்க, சன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். என் அறையில் என் பஞ்சணையில், எவ்வளவு உரிமையோடு பஞ்சவர்ணக் கிளி ஓயிலாகத் தூங்குகிறாள்! எனக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது.

ஆடை சற்றுக் கலைந்திருந்தது. தலை குலைந்திருந்தது. திலகம் அழிந்திருந்தது. வளைகரத்தில் "தேனலைகள்" என்ற புத்தகம் விரித்தபடியே இருந்தது. சுருள் மயிர்கள் சில, பிறை நெற்றியின் மேல் விழுந்து, அழகு செய்துகொண்டிருந்தன. எப்படியோ நானவள் அருகில் வந்துவிட்டேன். எப்படி இருக்கும் எனக்கு? யாருக்குக் கிடைக்கும் இந்த பெரும்பேறு? கரங்கள் துடிதுடித்தன. கன்னத்தில் 'இச்' என்று ஒன்று கொடுத்துவிடலாமா? கனியவள் கோபித்துக்கொண்டால் ......? பெண் கோபம் பொல்லாத தாயிற்றே' பூவிதழில் உள்ள தேனைப் பருகிட ஆசை. மிக அருகில் அந்த நோக்கத்தோடு முகத்தைக் கொண்டு சென்றேன், ஆனால், அப்படிச் செய்யாமல் தோல்வியோடு திரும்பினேன். ஏனோ, நடுக்கம்! வரமாட்டேன் என்ற தைரியத்தை எல்லாம் வேண்டி அழைத்துக்கொண்டு, இந்த முறை என்ன ஆனாலும் தவறவே கூடாதென்று, கடைசியாக முயன்றபோது காரிகையின் விழிகள் திறந்துகொண்டன. அவசர அவசரமாக ஆடை திருத்தி நின்றாள்! அப்படியே அனைத்தையும் சரிபடுத்திக்கொண்டாள், இப்போதுதான் எனக்கு மின்சாரக் கம்பியைத் தொட்டதுபோலாகியது. யாரைப்பற்றி நான் குழப்பத்தில் இருக்கிறேனோ, அவளையே திரும்பத் திரும்பப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. முதுகைக் காட்டி நின்ற என்னைப் பார்த்து, முத்துப்பல் வரிசைக்காரி பேச்சைத் துவக்கி வைத்தாள்.

'யாரது?...நீங்களா? இங்கெப்படி வந்தீர்கள்?"

"அப்படிக் கேட்க வேண்டியது நீயல்ல; நான்! முறைமாறி இருக்கிறது. விசித்திரமாகத்தான் இருக்கிறது. கொலைகாரி! வீட்டில் நுழைந்துவிட்ட விஷப்பாம்பு!!".

"நில்லுங்கள். இந்த முறையும் போய்விடாதீர்கள். நீங்கள் அடைந்திருக்கும் குழப்பத்தை நான் யூகித்து உணர்ந்து கொண்டேன். அது என்னுடைய பெட்டி அல்ல. அதில் தலைமட்டும் இருந்ததும் எனக்குத் தெரியாது. நல்லவேளையாக நான் தப்பியிருக்கிறேன். எனக்கேற்பட்ட சங்கடத்தைத் தொலைக்க ஏற்கெனவே அங்கிருந்த பெட்டியின்மேல் அமர்ந்தேன். அதையெல்லாம் விரிவாகச் சொல்லுகின்றேன். என்னை நம்புங்கள், கண்ணால் பார்ப்பதும் பொய்யென்பதை மறந்துவிடாதீர்கள். அபலை வடிக்கும் கண்ணீருக்கு அணைபோடுங்கள். ஆதரவு காட்டுங்கள்."

"அன்பும் பண்பும் கொண்டவள். அழகும் அறிவும் ஒருங்கே பெற்றவள். எதையும் தாங்கும் இதயம் கொண்டவள். இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகக் கருதுபவள்"

"ஜார் அந்தப் புனிதவதி?"

'இன்பமே! என் அன்பே! நீ தான என் உயிர்! நான நடமாடுவதே உன்னால்தான்!"

"ராஜா! என்னைக் கைவிட்டு விடாதீர்கள். கதறிச் செத்துவிடுவேன்"

"மலர்முகவதி! என்னை மறக்காத குணவதி' எனக்கிந்த உயிரின மேல் ஆசை இல்லை. உன்மேல் தான் என உயிரையே வைத்திருக்

கிறேன். எதை இழக்க நேர்ந்தாலும் ஊமையாக இருப்பேன். ஆனால், உனை இழக்க ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன். கொந்தளிக்கும் கடலாவேன். நெருப்பைக் கக்கும் எரிமலையாவேன்''

''ஐயோ, ஈதென்ன வம்பு! என்னை இன்பத்தில் தள்ளித் துள்ளவைக்கும் சொல்லம்பு!!...... பொறுமை...பொறுமை!''

காலை நான், கன்னியவளை அணுகச் சென்றேன். பெண்ணல்லவா, பிகு செய்தாள். என்னையவள் கொஞ்சிவந்தகாலம் போய், நானவளைக் கெஞ்ச வேண்டிய கட்டம் வந்துவிட்டது. நழுவப் பார்த்தாள். நங்கையைத் தழுவிக்கொண்டிருந்த ஆடையோ என் கையில்! தப்பமுடியுமா தையல்! பெண்களைக் காண்டேகர் பேரிச்சம்பழத்திற்கு ஒப்பிடுகின்றார். அவசரப்பட்டால்கொட்டைப் பல்லை உடைத்துவிடும் என்று கேலி செய்கின்றார். கொஞ்சம் கொஞ்சமாகச் சுவைக்க வேண்டும் என்று வேறு, சுவையாக ஆலோசனை வழங்குகிறார். நானோ நறுக்கென்று கடித்திடவே துடியாய்த் துடித்தேன்.

கதவைச் சாத்த மறந்த குறை. பெற்றவர்கள் அங்கே பூதம்போல் வந்துவிட்டார்கள். எதிர்பார்க்கவில்லை! தலை குனிந்தோம். அந்த விவகாரத்திற்கே புதியவர்களாயிற்றே எங்களுக்கு, வெட்கம் இருக்காதா?

''அடடே! எக்கச் சக்கமான நேரத்தில் வந்துவிட்டோம். கதவைச் சாத்தும்நேரத்தைக்கூட பாழாக்க விரும்பவில்லையோ! அவசரக்காரர்கள்! ஒருவார்த்தை இருவரையும் கேட்கலாம் என்று வந்தோம். கேட்காமலேயே உங்கள் கதை புரிந்துவிட்டது. வருகின்றோம்''

குனிந்திருந்த நாங்கள் நிமிர்ந்தோம். ஒரே, கொண்டாட்டம்! இரும்பாக இருந்த என்னை இன்பத் தென்றலாக மாற்றிவிட்ட கெட்டிக்காரியைக் கையில் பிடிக்க முடியவில்லை. காரியம் கைகூடும்போது கும்மாளத்திற்குக் குறைச்சல் இருக்குமா? பெற்றவர்கள் தீவிர ஆலோசனையில் இறங்கிவிட்டிருந்தார்கள். ''சிக்கனமாக நடத்தலாமா? இருபத்தையாயிரம் திருமணச் செலவிற்குப்போதுமா? தடபுடலாக அவர்கள் திட்டம் வகுத்துக்கொண்டிருந்தார்கள். பல ஆயிரத்தைக் கொட்டி வாங்கியிருந்த புதிய காரில், மரீனாவை நோக்கிப் பறந்தோம்.

சாயாதேவி என்மேலே சாய்ந்துவிட்டாள்! பூவிலுள்ள தேனை, வண்டு............குடித்துக்கொண்டிருந்தது!

★

---

9-ம் பக்கத் தொடர்ச்சி

அமெரிக்க நாடுகள் என்றழைக்கிறார்கள்.

ஐரோப்பாவின் வடகோடி நாடுகளான பின்லந்து, எஸ்டோனியா, லிதுவேனியா, நார்வே இவைகளை பால்டிக் நாடுகள் என்று கூறுகிறார்கள். மத்திய கிழக்கு நாடுகளான சாடி அரேபியா, சிரியா, ஈரான், ஈராக், ஜோர்டான், லெபனன், இஸ்ரவேல் முதலியன யாவரும் அறிந்ததே. ஐரோப்பாவில் ஸ்பெயினும், போர்ச்சுகலும் சேர்ந்தது ஐபீரியா தீபகற்பம். நார்வேயும் ஸ்வீடனும் சேர்ந்தது ஸ்காண்டிநேவியா தீபகற்பம்.

மிகவும் சாதாரணமாக இரஷ்யா என்று அழைக்கிறோம். அது கொச்சையாக அழைப்பதையே ஒக்கும். சோவியத் யூனியன் நாடுகள் (யு. எஸ். எஸ். ஆர்.) என்று அழைப்பதே சரியான முறை. இரஷ்யக் குடியரசு சோவியத் யூனியன் நாட்டின் ஒரு அங்கமே. உலகில் ஏனைய நாடுகளைவிட அதிகமான நாடுகளின் எல்லைகளைத் தொட்டுக்கொண்டிருக்கும் நாடு சோவியத் யூனியன் நாடுகளே. அந்நாட்டின் எல்லைகள் முறையே நார்வே, பின்லந்து, போலந்து, செக்கஸ்லோவேகியா, ஹங்கேரி, ருமேனியா, துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான், சைனா, மங்கோலியா, கொரியா ஆகிய நாடுகளின் எல்லைகளைத் தொட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தோ சீனாதான் வட, தென் வியட்நாம், கம்போடியா, லாஸ் முதலிய நாடுகளாகப் பிரிந்திருக்கின்றது. சையாம் தாய்லந்தாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆசியா மைனர் என்ற நாட்டைத் துருக்கி தன்னுள் அடக்கியிருக்கிறது.

சில நாடுகளின் பெயர் பார்ப்பதற்கு ஒன்றேபோல் தோன்றும். உதாரணமாக கானா, கியானா, கினி என்பவை. கானா என்பது முன்னைய கோல்டு கோஸ்டு. அண்மையில் ஆங்கிலர் பிடிப்பினின்றும் விடுதலை பெற்றது. அதன் பிரதமர் என்குருமாதான் இந்தியாவிற்கு வந்தது. இந்நாடு மேற்கு ஆப்ரிகாவில் கடற்கரையோரம் அமைந்திருக்கிறது.

கியானா என்பது தென் அமெரிக்காவில் வடகோடி கடற்கரையில் அமைந்த நாடு. இதை மூன்று பகுதிகளாக்கி முறையே ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், டச்சுக்காரர்கள் தங்கள் ஆதிக்கங்களில் வைத்திருக்கிறார்கள்.

கினி என்பது பொதுவாக ஆப்பிரிக்காவில் மேற்குக் கடற்கரை நாடுகளனைத்தையும் குறிக்கும். நியூகினி என்ற தீவு ஆஸ்திரேலியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் நடுவில் இருக்கிறது. அதன் கிழக்குப் பகுதி ஆஸ்திரேலியர் ஆதிக்கத்திலுள்ளது. மேற்கு இரியன் என்றழைக்கப்படும் மற்றைப் பகுதி டச்சு ஆதிக்கத்திலுள்ளது. அதன் உரிமை விஷயமாக இந்தோனேசியாவிற்கும் டச்சுக்காரர்களுக்கும் இடையே புகைந்துகொண்டிருக்கிறது.

நாற்பத்தொன்பது மாகாணங்களைக் கொண்ட பெடரல் நாடு ஐக்கிய அமெரிக்க நாடுகள் (யு. எஸ். ஏ.) அதை அமெரிக்கா என்றே கொச்சையாகக் கூறுகிறோம். யு. எஸ். ஏ. என்பதுதான் முறையான பெயர்.

இப்பெயர்கள் போன்றதே ''மதராஸ்'' என்பதும். கொச்சை மொழி மட்டுமல்ல, கொஞ்சமும் பொருத்தமும் பொருளுமற்றதுமாகும். தமிழ் பேசும் நாட்டைத் தமிழ்நாடு என்றழைப்பதால் ஏற்படும் அவமானம் யாதோ, நாமறியோம். பச்சைத் தமிழன் உள்ளத்தில் பசுமையும், பக்தவத்சலத்திற்குப் பக்குவமும், சுப்பிரமணியத்துக்குச் சுய உணர்வும் ஏற்பட இன்னும் எவ்வளவு காலம் பிடிக்குமோ? அதையும் நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை.

★

# வீராங்கனை—வெர்சாரி ஐரிஸ்

இரண்டாவது உலகப்போரின் போது நடந்த, வீரம் கலந்த உண்மைக் கதை இது. இத்தாலியிலே, சலசலவென இனிய ஓசை எழுப்பி ஓடும் போ ஆற்றங்கரையின் தென் மருங்கிலே அமைந்த, மலைகள் சூழ்ந்த எழில் மிக்க ரோமக்னுவில் நடந்த கதை இது.

தம் நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டு உயிர் நீத்த வீரர்களின் பட்டியல் நீண்டுகொண்டிருந்த காலம் அது.

இந்தப் பெருமைமிக்க நாட்டின் மூலையிலிருந்துதான் நூற்றுக்கணக்கான வீரர்களுடனும், வீராங்கனைகளுடனும் சேர்ந்து போரிட்டு ரோம் நகரத்து வாயிலிலே வீரமரணமடைந்தான் கரிபால்டி.

1943-ம் ஆண்டு நாஜிகளின் படையெடுப்பால் இத்தாலி நாசமடைந்தது. நாசமடைந்துகொண்டிருந்த இத்தாலி நாட்டினைக் காக்கும் நற்பணியில் ஈடுபட்டிருந்தனர், ஆயிரக் கணக்கான இளங்காளைகள். அவர்களுள் ஒருத்திதான், ஆண்களுக்குச்சரி நிகராகப் போர்புரிந்த, குடியான குலத்தில் பிறந்த அழகி ஐரிஸ்வெர்ஸாரி.

சில்வியோ கார்பாரியின் தலைமையின் கீழ், நாட்டுப் பிரிவினைக்காக ஓர் இயக்கம் பாடுபட்டுவந்தது. அக்கூட்டத்தில் பணிபுரிந்துகொண்டிருந்தார் ஐரிஸின் தந்தை நாஜிகளுக்கு எதிராகப் பணிசெய்துகொண்டிருந்தபோது ஓர் நாள்......!

ஐரிஸின் வீட்டிற்குத்தீவைத்துவிட்டு அவள் குடும்பத்தையே சிறைப்படுத்திவிட்டனர். ஐரிஸ் மட்டும் தப்பிவிட்டாள்.

—[ 1 ]—

## உடலின் வேதனையும் உள்ளத்தின் கொந்தளிப்பும்

சுகுணா

காலுக்கு உறையுமின்றி, உடலை மறைக்கச்சரியான உடையுமின்றி நடந்துகொண்டிருந்தாள் ஐரிஸ்.

உடலுள் இருக்க விருப்பமில்லாததுபோல் குருதி, 'குபுகுபு' வென வெளிவந்துகொண்டிருந்தது. இரத்தம் பெருகிவரும் இடத்தைப் னிக்கட்டியால்தேய்த்துக்கொண்டிருந்தாள்.

தீப்பற்றி எரியும் வீட்டை ஒருமுறை திரும்பிப் பார்த்ததும், உடலின் வலிமையும் அவள் உணர முடியவில்லை. உள்ளத்தின் வலிதான் பெரிதாக இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தாள். பள்ளத்தாக்கே பயங்கர அமைதியில் ஆழ்ந்துகிடந்தது.

வீட்டிற்கு முன்புறம் இருந்த குன்றின்மீது ஏறிக் கண்ணோட்டம் விட்டாள். இரண்டு வழிகள் கண்களுக்குத் தென்பட்டன. அவற்றுள் ஒன்றுதான் சென்வாலன்டினோவிற்குச் செல்லும் வழி.

சென்வாலண்டினோ ஓர் சிறிய கிராமம். அதாவது கிராமம் எனக் கூறக் கூடிய அளவிலே குடிசைகள் சிலவும், குடியானவர் வீடுகள் பத்தும், மாதாகோயில் ஒன்றும் உள்ள சிறிய ஊர் அது.

சிறிய கிராமமாக இருந்தாலும், அந்த நாட்களில்—1944-ல், சில்வியோகார்பாரிக்கும் அவன் ஆட்களுக்கும் ஒளிந்துகொள்ளும் பாதுகாப்பு இடமாகவும், போர்த்திட்டம் தீட்டும் நல்ல கூடமாகவும், போர்ப பயிற்சி செய்துகொள்ளும் பாசறையாகவும் இருந்தது.

அந்தக் கிராமத்தை நோக்கித்தான் நடையைச் செலுத்தினாள் ஐரிஸ். பதினைந்து கல் தொலைவு நடக்கவேண்டும். சற்று முன் ஏற்பட்ட கிளர்ச்சிகள் அவள் உள்ளத்தில் ஊறியில்லாவிடின், அந்தத் தூரத்தைக் கடந்து செல்ல அவளின் உடலில் வலிமை இருந்திருக்காது.

நடந்துகொண்டேயிருந்தாள்—இராணுவத்தினரின் கண்களுக்குப் படாவண்ணம் மறைந்து மறைந்து நடந்து சென்றாள்.

வாலன்டினோ கிராமத்துக்கோயிலின் உச்சி, ஐரிஸின் கண்களில் படுவதற்கும், கதிரவனின் ஒளி கண்களினின்றும் மறைவதற்கும் சரியாக இருந்தது. அப்போதுதான், பசி, குளிர், அசதி, உடலின் வாதை அனைத்தையும் உணர ஆரம்பித்தாள்.

"இன்னும் சில தொலைவுதான்—எப்படியும் அடைந்தே தீரவேண்டும்" அவள் உதடுகள் முணுமுணுத்தன.

அவளைப் பார்த்து ஒருவன், "நில், நீ யார் என்பதைக் கூறிவிட்டு நகரவேண்டும்" என்று அதட்டினான்.

"நான் ஐரிஸ்வெர்ஸாரி—சில்வியோவின் படையில் சேரவந்துள்ளேன்" — அவள் குரலில் வீரம் கொப்பளித்திருந்தது.

ஜரிஸ் அறைக்கு அழைத்து வரப்பட்டபோது சில்வியோ தன் நண்பன் அட்ரியானேவுடன், ஒரு தேசப் படத்தை எதிரில் வைத்துக் கொண்டு ஏதோ யோசனை கேட்டுக் கொண்டிருந்தான். மேசையின் மீது மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்தது. தடிப்பான மரத்தினுல் ஆன நாற்காலிகளும், மேசைகளும் நான்கைந்து இருந்தன. தோல்பைகள் சுவரில் வரிசையாக மாட்டப்பட்டிருந்தன.

'ஓர் புதிய படை ஆள்'' என்று கூறினுன், ஐரிஸை அழைத்து வந்தவன்.

இரண்டு பேரில் யாருமே தலை நிமிரவில்லை. சில்வியோ கூறினுன் —''இப்போது நேரமில்லை. அந்த இளைஞர்கள் இருக்குமிடத்திற்கு அழைத்துச் செல். பிறகு பார்க்கின்றேன் அவனை'' என்று.

''இது பெண்'' என்ருன் வந்த படையாள்.

சில்வியோ நாற்காலியினின்றும் நேர ஆட்ரியானே நிமிர்ந்து நோக்கினுன்.

'என் குடும்பத்தார் அனைவரையும் இன்று காலை பிடித்துச் சென்றுவிட்டனர் அவர்கள். நான் மட்டும் சாளரத்தின் வழியே தப்பி வந்துவிட்டேன்'' என்று பரிதாபத்துடன் கூறினுள்.

சில்வியோ அவளை உற்றுநோக்கினுன். வீங்கிப்போயிருந்த நீல நிறக்கால்களையும், ஆர்வம் கொந்தளிக்கும் கண்களையும்பார்த்தான் உட்காரச் சொன்னுன்.

ஆடையின்றித் தெரியும் கால்களை மறைக்க முயன்ருள் ஐரிஸ்.

''இது ஆண்களுக்கு உரித்தான இடம். பெண்களுக்கு இங்கு இடமில்லை. இங்கு முப்பது ஆண்கள் உள்ளனர். வேண்டுமானுல் உன்னை இங்குள்ள பாதிரியாரிடம் அழைத்துச்செல்கின்றேன். அவர் மிக்க நல்லவர். என் நண்பருங்கூட. அவர் உன்னைக் கண்காணித்துக் கொள்வார்''.

''என்னை யாரும் கண்காணிக்க வேண்டிய அவசியமில்லை. நான் போர் புரிய விரும்புகின்றேன். காலையில் கண்ட காட்சிக்குப் பிறகுமா, நான் பாதிரியின் வீட்டில் ஒளிந்து வாழ்வேன் எனக் கருதுகின்றீர்கள்?''

''நீ எங்களுடன் வாழமுடியாது. போர் புரிதல், பதுங்கி வாழ்தல், சில நேரங்களில் பட்டினியுடனும் இருக்க நேரிடும் இங்கு''.

ஐரிஸின் கண்களில் கோபம் கொப்பளித்தது. ''சரி' அப்படியானுல் போகின்றேன். யார் பெண்ணைத் துணையாக வைத்துக்கொள்ள அஞ்சாதுள்ளனரோ அவர்களிடம் செல்கின்றேன்.''

புறப்பட எழுந்தவளைக் கைப்பிடித்து நிறுத்தினுன் சில்வியோ. அப்போதுதான் அவள் உடல் நனைந்து இருந்ததையும், உடலினை மறைக்கச் சரியான உடை இல்லாதிருந்த நிலையினையும் உணர்ந்தான். அவன் கண்களில் பரிவு ஏற்பட்டது.

''பொறு, உனக்கு உடைகள் தருகின்றேன். இன்றிரவு இங்கேயே தங்கியிரு. இக்காரியத்தில் என்ன செய்ய முடியும் என்பதைப் பிறகு யோசிக்கலாம்'' என்ருன்.

ஆட்ரியானே வெளியே சென்றுவிட்டான்.

சில்வியோ, ஐரிஸை உற்று நோக்கினுன். ''என்ன நடந்தது? விவரமாகக் கூறு'' என்ருன்.

நடந்தவற்றைத் தெளிவாகவும், சுருக்கமாகவும் கூறினுள். கதையின் முடிவிற்கு வரும்போது, சில்வியோ மிகவும் கவனத்துடனும் கூர்மையுடனும் கவனித்தான். அதே அறையில் எத்தனையோ பேரின் கதையினைக் கேட்டுள்ளான். ஆனுல் அவளின் நிலையினைப்போல் இதுவரை கண்டதே இல்லை.

ஐரிஸ் நாற்காலியை விட்டு எழுந்து தன் முதுகுப்புறத்தை அவன் பக்கம் திருப்பிக்கொண்டாள். கண்ணீரை அவளால் அடக்க முடியவில்லை யென்பதையும், அவள் கரங்கள் நடுங்குவதையும் பார்த்து, அவள் உள்ளத்தில் கப்பிக்கிடந்த வேதனையினைக் கற்பனை செய்து பார்த்தான் சில்வியோ. தன் வாழ்வில் முதன்முறையாகத் தான் உதவியற்ற நிலையில் இருப்பதை உணர்ந்தான். எந்த வார்த்தையும் அவளைச் சமாதானப்படுத்தாது என்று நன்ருகத் தெரியுமாதலால் மௌனத்தில் ஆழ்ந்தான்.

அவள் தந்தை, சில்வியோவிற்கு எவ்வளவோ உதவியாக இருந்தார். அதற்காகவேனும் அவளுக்கு உதவி செய்தே ஆக வேண்டும்.

அவளுக்குத் தேவையான உடைகளைக் கொடுத்து மாற்றிக் கொள்ளச் சொன்னுன். மறு வார்த்தை பேசாது வாங்கிக் கொண்டு அறையை விட்டு வெளியேறி விட்டாள்.

அட்ரியானே திரும்பிவந்து, சில்வியோவின் சிந்தனையைக் கலைத்தான்.

''பெண்களை இங்கு வைத்துக் கொள்ளக்கூடாது. ஆண்களுக்கு அவர்கள் தொல்லையினைத்தான் அளிப்பர். நாளை காலை அவளைப் பாதிரியிடம் அனுப்பிவிடு.''

சில்வியோ மறுப்புடன் தலையை அசைத்தான். ''அப்படிச் செய்தால் காரியமே கெட்டுவிடும். அவள் வேற்றுக் கூட்டத்திலும் சேர்ந்துவிட நேரிடும். அப்படி விடக்கூடாது. அவள் அதிர்ச்சி இன்னும் தீரவில்லை. கொஞ்சம் அவளுக்கு அவகாசம் அளிக்கலாம்.''

—[ 2 ]—

## பிரிவினை வீரர்களிடையே ஐரிஸ்.

உடையை மாற்றிக்கொண்டு, ஐரிஸ் அறைக்குள் வந்தாள். அளவு மிகவும் பெரியதாக இருந்ததால், அந்த உடைகள் அவளுக்கு என்னவோ போல் இருந்தன. காலுறைகளும் சற்றுப் பெரியதாகவே இருந்தன.

''இப்போது என்னைப் பார்த்தால் சார்லிசாப்ளின் மாதிரி இருக்கின்றது. இல்லையா?'' என்ருள்.

பிறகு, ''ஊசியும் நூலும் இருக்கின்றதா'' எனக் கேட்டாள்.

நாற்காலியில் சாய்ந்தவண்ணம் மேசை அறையினைக் காண்பித்தான் சில்வியோ.

அதிலிருந்து ஊசி, நூல், கத்தரி அனைத்தையும் எடுத்துக்கொண்டாள்.

''எனக்கேற்றவாறு கத்தரித்துத் தைத்துக்கொள்ளட்டுமா?''

தலையை அசைத்தவாறே பதில் அளித்தான் சில்வியோ.

சில்வியோ தன் ஆட்களையெல்லாம் கூட்டிவரச் சொன்னுன். அனைவரும், அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

அவர்கள் போக்கினைக்கவனித்ததும், ஐரிஸின் நிலையைப்பற்றி அவர்களுக்குக் கூறி விளங்கவைப்

பது கடினம் என்பதை உணர்ந்தான்.

இருந்தும் கூறினான்:—"எதிரிகளின் படை ஐரிஸின் குடும்பத்தையே சிறைப்படுத்திவிட்டது. அவள் மட்டும் எப்படியோ தப்பித்து விட்டாள். நம்முடன் சேர்ந்து போர்புரிய விரும்புவதால், இங்கு வந்துள்ளாள்?

"பெண்ணா! ஓ! அழகாக இருக்கிறாளோ?" கூட்டத்துள் ஒருவன் கிண்டலுடன் கேட்டான்.

அதனை இரசிப்பதுபோல் அனைவரும் ஆரவாரம் செய்தனர்.

மற்றும் ஒருவன், "என் துணைக்கும் ஓர் பெண் தேவை என்று யோசித்துக்கொண்டிருந்தேன்" என்றான்.

சில்வியோ சாட்டையால் ஓர் சத்தம் எழுப்பினான். "இவள் நீங்கள் எண்ணும் பெண்களைப்போல் அல்ல. அவள் இப்போது இங்குதான் உள்ளாள். அவளைப்பற்றி யாரும் முட்டாள்தனமாக எண்ணக் கூடாது. யாருடைய அழுக்குக்கரங்களாவது அவள்மீது பட்டால் சுட்டுவிடுவேன்"

உத்தரவு கலந்த குரலில், 'படபட'வெனக் கூறிவிட்டு ஐரிஸின் அறைக்கு வேகமாக நடந்தான்.

"உள்ளே வரலாமா?"

கதவைத் திறந்து உள்ளே வர, வழியைக் காண்பித்தாள்

"நீ எத்தனை நாட்கள் தங்க விரும்புகின்றாயோ, அதுவரை இங்கு தங்கலாம். ஆனால் என் ஆட்களுக்கு நான்......"

"எனக்கும் தைரியம் உண்டு என்பதை நிரூபிக்கவேண்டும். அவ்வளவுதானே" என்று குறுக்கிட்டாள்.

"நீ பெண் என்பதையே அவர்கள் மறக்கும்படி செய்யவேண்டும். இப்போதிலிருந்தே என் சொற்படி செய். மற்றவர்களைப்போல் நீயும் உத்தரவு பெற்றுக்கொள்"

"மற்றும் ஒன்று நினைவில் வைத்துக்கொள். இங்கு அரசியல் கிடையாது. ஜெர்மானியர்களிடம் போர் புரிகின்றோம். நம்நாட்டிற்காக நாம் போர்புரிகின்றோம். இதைத்தவிர வேறு எந்த அரசியலுக்காகவும் நாம் சண்டைசெய்யவில்லை. தெரிகின்றதா?"

முழுப்பொருளும் விளங்காத நிலையில் ஐரிஸ் தலையசைத்தாள்.

"இங்கு படுத்துக்கொள். மெத்தை ஒன்று அனுப்பிவைக்கின்றேன். இரவுகளில் கதவைத் தாழ்ப்பாள் இட்டு அடைத்துக்கொள்"

கதவைச்சாத்திவிட்டுத் திரும்பிவிட்டான்.

அன்று மாலை, சமையல் அறையினை அடைந்ததும், அவள் கால்கள் உதறின. அவள் முன்னால், ஆர்வத்துடன் நோக்கும் மனிதக்கூட்டத்தைக் கண்டதும் அவளுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பேசினாள்.

"சரி, என்னை நன்றாகப் பாருங்கள். உடலுக்குப் பொருத்தமில்லாத உடைகளையும், காலுறைகளையும் மாட்டிக்கொண்டிருக்கும் நான் ஒரு பெண், பார்ப்பதற்கு வேடிக்கையாகத்தான் இருப்பேன். சிரிக்க வேண்டியவற்றையெல்லாம் இப்போதே சிரித்துவிடுங்கள், பிறகு மறந்துவிடுங்கள். ஏனெனில் இனி நானும் உங்களுள் ஒருத்தி!"

வந்து இரண்டு நாட்கள்வரை, சில்வியோவைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. சமையல் அறையின் பொறுப்பு ஐரிஸிடமே இருந்தது. அந்த இரண்டு நாட்களில் அவளின் சொந்தப் பிரச்சனையினை எண்ணவும் நேரம்கிடைக்கவில்லை. பரிமாற வேண்டிய சமையல் ஏராளமாய் இருந்தது. சாப்பிட்டவுடன், தட்டுகளை கழுவுவதற்காக அப்படியே விட்டுவிட்டு உடனே மறைந்துவிடுவர் ஆட்கள்.

முழு நேரமும் வாலன்டினோ கிராமத்தில்தான் இருந்தான் சில்வியோ. எந்த நேரமும் அவனுடைய கண்கள் அவளை நோக்குவதை உணர்ந்தாள். அந்த உணர்வில் ஓர் மகிழ்ச்சியையும் கண்டாள். எல்லோரும் அவளைப் பார்க்கின்றனர் என்றாலும், சில்வியோவின் பார்வையில் 'ஏதோ' ஒன்று இருக்கத்தான் செய்தது. அனைவரின் பார்வைக்கும் அது மாறுபட்டிருந்தது.

மாலை, அட்ரியானோ வந்து நண்பனுடன் உரையாடிக்கொண்டிருந்தான். ஐரிஸ் சமையல் அறையினின்றும் வெளியே வந்துவிட்டாள்.

அவர்கள் இருவரும் ஏறக்குறையப் பதினைந்து விநாடிகள் பேசியபின், அட்ரியானோ சென்றுவிட்டான்.

மீண்டும் ஐரிஸ் வரவழைக்கப்பட்டாள், அவளால் உணவருந்த முடியவில்லை. 'உன்னுடன் கொஞ்சம் பேசவேண்டும்'

அவன் முன் நாற்காலியைப் போட்டுக்கொண்டுஉட்கார்ந்தாள்.

"உன்னிடம் இரண்டு சேதிகள் கூறவேண்டும். எங்கள் ஒற்றன் மூலம், உன்னுடையபெற்றோர்கள் சிறையில் இருப்பதாகவும், அநேகமாக விசாரணைக்கு அழைத்து வரப்படுவார்கள் போலவும் தெரிகின்றது. குழந்தைகளுக்கு என்ன நேரிடும் என்று ஒன்றும் தெரியவில்லை."

கூறிக்கொண்டுள்ளபோது, அவள் முகத்தில் எவ்வித பாவமும் இன்றிக் கண்கள் தாழ்ந்திருந்தன. கடைசியில் அவள் நிமிர்ந்து நோக்கினாள், "மிக்க நன்றி. மற்றொரு சேதியையும் கூறவேண்டும்!"

அவள்மீது மிக்க பரிவு ஏற்பட்டது. முதலில் ஆறுதல் கூற எண்ணினான்; என்ன கூறுவது என்று தோன்றவில்லை.

"மற்றொன்று......நாளை என்னுடன் நீ சவாரிக்கு வரவேண்டும். குதிரைச்சவாரி சாதாரண காரியமல்ல, கொஞ்சம் சிரமமானதுதான்" என்று கூறிக்கொண்டே சென்றுவிட்டான்.

மீண்டும் அன்றுமாலையில் சமையல் அறையில் அனைவரும் சூழ்ந்துகொண்டனர். ஆட்கள், பாராக்காரர்களின் வருகைக்காகக் காத்திருந்தனர். மறுநாள் காலையில் செய்யவேண்டிய செயல்கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

கேட்டும் கேட்காததும்போல் மூலையில் உட்கார்ந்திருந்தாள் ஐரிஸ். அவள் குடும்பத்தின் நினைவு அவளுக்கு மிக்க வேதனையளித்தது. குழந்தைகள் என்ன ஆவார்களோ — அனைவரையும் போல் அவர்களும் கொல்லப்படுவார்கள்!

நினைக்கும்போதே, துக்கம் அவள் நெஞ்சை அடைத்தது. தனிமையின் பயங்கரத்தை உணர்ந்தாள். சுற்றிலும் உள்ளவர்களைப் பார்த்தாள். அங்குள்ள அனைவரிடமும், சில்வியோ மகிழ்வுடனும் இதயம் கலந்தும் உரையாடிக்கொண்டிருந்தான்.

[அடுத்த இதழில் முடியும்.]

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஆபத்து ஏற்பட்டதற்கு, சீன தரப்பில் சொல்லப்படும் காரணம், அங்குள்ள நிலப் பிரபுக்களும் சீமான்களும் எப்படியும் சீனாவின் மேற்பார்வையில் இயங்கும் அரசைக் கவிழ்த்துவிட முயற்சித்தார்கள் என்பதுதான். திபேத் விஷயத்தில் சீனாவுக்கு என்ன?— என்லாம். இன்றுள்ள ஒப்பந்தங்களின்படி, சீனாவின் மேற்பார்வைக்குக் கட்டுப்பட்ட இடம், திபேத். "மேற்பார்வைக்குக் கட்டுப்பட்ட இடமே ஒழிய, சுதந்திரமான ஒரு 'யூனிட்' என்று கருதப்படுகிறது. இந்த உறுதியை, செஞ்சீனாவும், அளித்திருக்கிறதாம்.

ஆயினும், திபேத்தில் உள்ள சில பலருக்கு, சீனாவின் 'மேற்பார்வை' பிடிக்கவில்லை! தங்கள் நாட்டின் விதிமுறைகளை வகுத்துக்கொண்டு தாங்களே வாழலாமேஎன்று நினைக்கின்றனர்!! இப்படிப்பட்டவர்கள் யார் தெரியுமா? மக்கள் அல்ல! மக்களின் உழைப்பால் வாழும்[illegible]பிரபுக்கள்!! எங்கே சீனாவில் நடந்ததுபோல, தங்கள் சுகபோகத்துக்கும் ஆபத்துவந்து விடுமோ என்று பயப்பட்டுச் சில ஆண்டுகளாகவே கலவரங்களில் ஈடுபட்டு வந்தார்கள். கடைசிக் கட்டமாக, கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு, லாசாவிலுள்ள சீனப் படைகளை விரட்டவும், டலாய்லாமாவைத் தங்கள் கைவசப்படுத்தவும் முயன்றார்கள், "நாங்கள் நடவடிக்கை எடுத்தோம், அவர்கள் டலாய்லாமாவையும் இழுத்துக்கொண்டு ஓடிவிட்டார்கள்" என்கிறது சீனத்துச் சேதி.

உண்மை அறியோம், நாம்! 'அங்கேரி'யின் உள்நாட்டு விஷயத்தில் ருஷியா தலையிட்டது போல, சீனாவும், திபேத் உள்நாட்டு விஷயத்தில் 'படை'களுடன் நுழைந்திருக்கிறது — இது சரியல்ல, என்று பேசியிருக்கிறார்கள் பார்லிமெண்டில்!!

ஒன்று மட்டும் தெரிகிறது — வசதியில்லாத திபேத் மக்கள், நேருவைப் பார்க்கிறார்கள். பஞ்சசீலம் பேசியவராயிற்றே, பாதகம் போக்க உதவமாட்டாரா என்று. பண்டிதர் என்ன செய்வார்! எப்படிச் சீனாவுடன் 'சண்டை'க்கோ, 'தகராறு'க்கோ போகமுடியும்!!

சுற்றிவளைத்து, வார்த்தைகளைத் தூதனுப்பி, பதில் அளித்திருக்கிறார், பார்லிமெண்டில்.

திபேத்தியரும் மனம்கோண முடியாது—சீனாவும், சண்டைக்கு வரமுடியாது. அப்படி, இரண்டு பக்கமும் விழாது, பேசியிருக்கிறார்.

நேருவின் திறமை நேர்த்தி! நேர்த்தி!! என்று பாராட்டலாமே ஒழிய, இதனால், யாருக்கும் பலனில்லை. இப்படிப் பலனில்லாத நேசத்தையும் பாசத்தையும் இன்னொருவருக்கு அள்ளியள்ளித் தருவதால் என்னபயன்! அவர்களுக்கும் பயனில்லை; நேருவுடைய நண்பர்களா இவர்கள், என்றெண்ணிய மக்களின்மலைப்பும் குலைந்து சரிகிறது!!

ஒன்றல்ல! இரண்டல்ல!! மிகப் பெரியவர்கள் என்று நமக்கெல்லாம் கொண்டுவந்து காட்டப்பட்டு, ஏடுகள் மூலம் சொல்லப்பட்டு, இன்று இருக்குமிடம் தெரியாமற்போன நேருவின் நண்பர்கள் ஏராளம்.

சரியான நண்பனையும், உதவும் தோழனையும், தேர்ந்தெடுப்பது சிரமம். தனிமனிதர்களுக்கே இப்படியென்றால், ஒரு அரசுக்கு, இன்னும் சிரமம். இங்கிருக்கும் மக்களின் வியப்பையும் பெருமையையும் பெற, வெளிநாட்டின் தலைவர்களைக் கொண்டுவந்து, நண்பர் நேசர், என்று காட்டிவருகிறார், நேரு. அவர்களுக்கும் வீழ்ச்சியும் தாழ்வும் வாராமலாபோகும்? உருளும் உலகாயிற்றே! அப்போது இவரால் ஒன்றும் செய்யவும் முடிவதில்லை—தனது 'பஞ்சசீலத்தை'க் காப்பாற்றவும் முடிவதில்லை—இவருடைய வரவேற்புக்கும் உபசரிக்கும் நமது வரிப் பணம் கரியானதுதான் மிச்சம்!!

★


தமிழ்ப் புத்தாண்டு அன்று வெளிவருகிறது

**மா. கி. தசரதன் எம். ஏ.**

எழுதிய

# தணலில் தங்கம்

**'திராவிட நாடு' இதழில் வெளிவந்த**

**எழிலோவியம்**

சுழல்விழி மாது கிளப்பிய சூறாவளியில்,
கயல்விழிப் பாவை சிக்கி இடர்ப்பட்டுத்
தணலில் தங்கமான காதை!

வெண்ணிலா வெளியீடு,
சி. காஞ்சிபுரம்.



காஞ்சிபுரம் ஏ. திருக்கச்சிநம்பி தெரு 'திரா[illegible] அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்[illegible]றது.